செய்தி இதழாகப் பதிவு செய்தது

# தினபதி

ரூ 2/=

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல. 4592 1984 ஜூன் 26 செவ்வாய்க்கிழமை ★ ★ ★ தினபதி

அம்பிகா!
உங்களை
அழைக்கின்றாள்!
நவீன டிசைன்களில்
நங்கையர் மனதைக்
கொள்ளை கொள்ளும்
தங்க, வைர நகைகளுக்கு
Ambiga
Jewellers
77, SEA STREET,
COLOMBO-11.
PHONE: 22839 — 34238.

நம்பிக்கையின்
சின்னம்
அம்பிகா!
தரமான 22 கரட்
தங்க நகைகளைப்
பெற்றுக் கொள்ள
நம்பிக்கையான ஸ்தாபனம்
அம்பிகா
ஜுவலர்ஸ்
77, செட்டியார் தெரு,
கொழும்பு — 11.
தொலைபேசி: 22839 — 34238

# பாடசாலைகள் நேற்று வழமைபோல் நடந்தன

## ஏழு இடங்களில் மட்டும் மேல் வகுப்பு மாணவர்கள் ஆட்சேப வெளிநடப்பு

### பாதுகாப்பு நடவடிக்கை தொடரும் என்று கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 26

கொழும்பிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பாடசாலைகள் நேற்று வழமை போல் நடந்தன. 7 பாடசாலைகளில் மட்டும் மாணவர்களின் வெளிநடப்புச் சம்பவங்கள் இடம் பெற்றன. எனினும் இப்படி வெளிநடப்புச் செய்த மாணவர்களில் பலர் பின்னர் வகுப்புகளுக்கு திரும்பி இருந்தனர்.

தற்போது அமுலில் உள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் மேலும் சில தினங்களுக்கு தொடரும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது-


## இந்த ஆண்டு புடைவை இறக்குமதி இல்லை

கொழும்பு, ஜூன் 26

போதியளவு புடைவை வகைகள் சலுசலாவின் களஞ்சியங்களில் இருப்பதால் இந்த வருடம் வெளிநாடுகளிலிருந்து புடைவை வகைகள் இறக்குமதி செய்யப்பட மாட்டா.

சட்ட விரோதமாக இந் நாட்டுக்குள் கொண்டு வரப்படும் புடைவை வகைகள் சுங்கத் திணைக்களம் மூலம் கைப்பற்றப்பட்டு, சலுசலா நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படுகின்றன.

இப்படி கைப்பற்றப்பட்ட புடைவைகளையும், மற்றும் கையிருப்புகளையும் கொண்டே இந்த வருட தேவையை சமாளிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. (த—II)



மாணவர்களுடன் அவர்களின் பெற்றோரும் நேற்று பாடசாலைகளுக்கு வந்திருந்தனர். கொழும்பில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு வெளியே பெற்றோர் திரண்டு நிற்பதைப் படத்தில் காணலாம். (த-ச)

## பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்துவதற்கு முன்னரே அதனை முறியடிக்கும் திட்டம்

கம் உதாவ இன்றைய

தற்போது அமுலில் உள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் மேலும் சில தினங்களுக்கு தொடரும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

ஏழு பாடசாலைகளில் மட்டும் மாணவர்களின் வெளிநடப்புச் சம்பவங்கள் நேற்று இடம் பெற்றன என்று கல்வி அமைச்சினால் நேற்று விடுக்கப்பட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதுவும் உயர் வகுப்பு மாணவர்கள் சிலரே இப்படி வெளிநடப்புச் செய்தனர்.

எனினும் அதிபரும் ஆசிரியர்களும் நிலைமையை விளக்கியதை அடுத்து இப்படியாக வெளிநடப்புச் செய்த மாணவர்களில் பலர் மீண்டும் வகுப்புகளுக்குத் திரும்பி இருந்தனர்.

வெளிநடப்பு இடம்பெற்ற 7 பாடசாலைகளில் 5 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் மீண்டும் வகுப்புகளுக்கு திரும்பி

(2ஆம் பக்கம் பார்க்க)

## கொள்ளை முயற்சி தோல்வி:

# துப்பாக்கிச் சமரில்

# இ.போ.ச. அதிகாரி

# ஒருவர் மரணமானர்

## ஐந்து பொலீஸ்காரர்கள் காயம்

கொழும்பு, ஜூன் 26

யாழ். கோண்டாவில் இ. போ. ச. பஸ் டிப்போ பணத்தைக் கொள்ளையடிக்கப் பயங்கரவாதிகள் மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது. எனினும் பயங்கரவாதிகளுக்கும் பொலீஸாருக்கும் இடையில் நடந்த துப்பாக்கிச் சமரில் இ. போ. ச. அதிகாரி ஒருவர் மரணமானர். ஐந்து பொலீஸ்காரர்கள் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை பி. ப. 4.30 மணியளவில் திருநெல்வேலியில் நடந்தது.

யாழ் பஸ் நிலையத்திலிருந்து கோண்டாவில் இ. போ. ச. பஸ் டிப்போவுக்கு பஸ் ஒன்றில் பணம் கொண்டு செல்லப்பட்டது.

சப் இன்ஸ்பெக்டர் ஒருவரும் மற்றும் நான்கு பொலீஸ் கன்ஸ்டபிள்களும் பஸ்ஸுக்கு காவலாகச் சென்றனர்.

திருநெல்வேலியில் பயங்கரவாதிகள் திடீரென்று பாய்ந்து துப்பாக்கிகளால் சுட்டு பஸ்ஸை வழிமறித்து பணத்தை கொள்ளையடிக்க முனைந்தார்கள்.

பொலீஸார் திருப்பிச் சுட்

(2ஆம் பக்கம் பார்க்க)

## பேசாலையில் எண்ணெய் ஆய்வு

பேசாலை, ஜூன் 25

பேசாலையில் மீண்டும் எண்ணெய் வள ஆய்வு, அகழ்வு வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

இவ்வேலைகள் அமெரிக்க நிறுவனம் ஒன்றினல் மேற்கொள்ளப்படும்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் பேசாலையில் மூன்று இடங்களில் ரஷ்ய அரசாங்கத்தினல் எண்ணெய் வள ஆய்வு, அகழ்வு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

இக் காலத்தில் எண்ணெய் வளம் கண்டுபிடிக்கப்படாததால், ஆய்வு, அகழ்வு வேலைகள் கைவிடப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (த—251)

சோமன்சோ



எண்ணெய் வள ஆராய்ச்சி எப்பொழுதுமே வழ வழா சமாச்சாரம் பாருங்கோ!

# வடபகுதி வாலிபர் உட்பட 7 பேர் ஸ்பெயினில் கைது

கொழும்பு, ஜூன் 26

பம்பாய் வழியாக ஸ்பெயினுக்கு 10 லட்சம் ரூபா பெறுமதியான 7 கிலோ ஹெரோயினைக் கடத்திய 7 பேர் ஸ்பெயின் பொலீஸாரினல் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களில் ஒருவர் வடபகுதி வாலிபர்.

இந்த சம்பவம் குறித்து சர்வதேச பொலீஸார் இலங்கை போதைவஸ்து தடுப்பு பணியகத்துக்கு அறிவித்துள்ளனர்.

பொலீஸாரினல் கைது செய்யப்பட்ட ஏனையவர்களில் 5 பேர் சிங்கப்பூர்த் தமிழர்கள், ஒருவர் ஸ்பெயின் நாட்டவர் (த-மு)

## நேச நாடுகளிடம் ஆலோசனை கோருகிறர் சூல்ட்ஸ்

வாஷிங்டன், ஜூன் 25

தாக்குதல் நடைபெறுவதற்கு முன்னரே பயங்கரவாதிகளை ஒழித்துக் கட்டும் திட்டம் ஒன்றை செயற்படுத்துவது குறித்து அமெரிக்காவின் நேச நாடுகள் ஆராய வேண்டும்.

சர்வதேச பயங்கரவாதம் சம்பந்தமாக இன்று 25 ஆம் திகதி வாஷிங்டனில் மாநாடு ஒன்று நடைபெறுகிறது.

இந்த மாநாட்டில் பேசுவதற்காக அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. ஜோர்ஜ் சூல்ட்ஸ் தயாரித்துள்ள உரையிலேயே மேற்கண்டவாறு கோரிக்கை விடப்பட்டது.

ஆனல் எத்தகைய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பது குறித்து இதில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இந்த உரையில் திரு. சூல்ட்ஸ் ரஷ்யாவைக் கடுமையாகக் கண்டித்தார். உலகில் பயங்கரவாதத்துக்கு ரஷ்யா ஆதரவு வழங்குவதாக அவர் குற்றஞ் சாட்டினர்.

திரு. சூல்ட்ஸ் தமது உரையில் இலங்கை ஜனதிபதியின் கோரிக்கைகள் பற்றி எதுவும் பிரஸ்தாபிக்கவில்லை.

இலங்கை ஜனதிபதி தமது அமெரிக்க விஜயத்தின் போது பயங்கரவாத ஒழிப்பு பற்றியே கூடிய கவனம் செலுத்தி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சமீபத்தில் லண்டனில் நடைபெற்ற ஐரோப்பிய கைத்தொழில் நாடுகளின் உச்சி மாநாட்டிலும் பயங்கரவாதம் பற்றி விவாதிக்கப்பட்டது.

இது குறித்தும் திரு. சூல்ட்ஸ் தமது உரையில் வரவேற்புத் தெரிவித்துள்ளார். (த)

# தபால் நிலையங்களுக்கு சென்றே பாஸ்போர்ட்டை பெற்றுக் கொள்ள முடியும்

## மட்டக்களப்பில் புதிய ஏற்பாடு

வவுணதீவு, ஜூன் 25

கொழும்பிலிருந்து வரும் பாஸ்போர்ட்டுகளை, அதற்குரியவர்கள், தபால் நிலையங்களுக்கு நேரில் சென்றே பெற்றுக் கொள்ள முடியும்.

மட்டக்களப்பு மாவட்ட தபால் அத்தியட்சகர் திரு. கே. நவரத்தினம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறர்.

சில தபால் நிலையங்களுக்கு வரும் பாஸ்போர்ட்டுகள் உரியவர்களிடம் கையளிக்கப்படுவதில்லையாம்.

இது தொடர்பான முறைப்பாடுகளை தொடர்ந்தே இந்த புதிய ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக திரு. நவரத்தினம் சொன்னர்.

கொழும்பிலிருந்து ஒருவருக்கு பாஸ்போர்ட் வந்ததும், சம்பந்தப்பட்ட தபால் அலுவலகத்திலிருந்து அவருக்கு அறிவிக்கப்படும்.

அவர் தமது அடையாள கார்ட்டைக் கொண்டு வந்து பாஸ்போர்ட்டை நேரில் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த நடைமுறை இவ்வாரம் முதல் அமுலுக்கு வருகிறது. (த-ங-318)

## இன்றைய நிகழ்ச்சிகள்

கொழும்பு, ஜூன் 26

கிராம எழுச்சி கம்உதாவ கொண்டாட்டங்களில் விவசாய அபிவிருத்தி, ஆராய்ச்சி உணவுக் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. காமினி ஜெயசூரிய, நீதி அமைச்சர் கலாநிதி நிஸ்ஸங்க விஜேரத்தின, புடை

(2ஆம் பக்கம் பார்க்க)

## நோன்பு தொழுகை நேரம்

26 — 6 — 1984

| | | |
|---|---|---|
| ஸஹர் முடிவு | — காலை | 4.22 |
| ஸுபஹு | — காலை | 4.37 |
| சூரிய உதயம் | — காலை | 5.57 |
| ளுஹர் | — பகல் | 12.20 |
| அஸர் | — பிற்பகல் | 3.41 |
| மஃரிபு | — மாலை | 6.29 |
| இஷா | — இரவு | 7.49 |

# பொலீஸ்நிலையம் மீது கற்கள் வீசப்படுவதாக என்னிடம் தெரிவிக்கப்பட்டது

## பேராதனைப் பல்கலைக்கழக உபவேந்தர் தொடர்ந்து சாட்சியம்

கண்டி, ஜூன் 26

சம்பவ தினம் இரவு 10.30 மணியளவில் பல்கலைக்கழக பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. கருணதாச என்னுடன் தொடர்பு கொண்டு பொலீஸ் நிலையம் மீது மாணவர்கள் சரமாரியாக கற்களை வீசுகின்றனர், என்று தெரிவித்தார்.

பேராதனை பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் பீ. எல். பண்டிதரத்ன இவ்வாறு கூறினர்.

கடந்த 19 ஆம் திகதி, பேராதனை பல்கலைக்கழகத்தில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தின் போது உயிரிழந்த மருத்துவ பீட பட்டதாரி மாணவன் எச். பி. ஏ. பத்மசிறியின் மரண விசாரணை கண்டி மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் மஜிஸ்திரேட் திரு. வி. நாணயக்கார முன்னிலையில் தொடர்ந்து நடைபெற்றது.

பேராசிரியர் பண்டிதரட்ன சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது—

பல்கலைக்கழகப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. கருணதாச சம்பவம் நடைபெற்ற தினம் இரவு 10.30 மணியளவில் என்னுடன் தொடர்பு கொண்டு பல்கலைக்கழக மாணவர்கள், பொலீஸ் நிலையத்துக்கு கற்களை சரமாரியாக வீசுகின்றனர் என்று தெரிவித்தார்.

இதனைத் தடுக்க முயற்சி எடுக்கும்படி பாதுகாப்புப் பிரி

(2ஆம் பக்கம் பார்க்க)

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

# திருமலை ஜூலை 26 சம்பவ பாதிப்புக்கும் நஷ்டஈடு

திருகோணமலை, ஜூன் 25

கடந்த ஆண்டு ஜூலை 26 இல் திருகோணமலை நகரில் கடற்படையின் ஒரு பிரிவினரால் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் வன்செயல் சம்பவங்களில் பாதிக்கப்பட்ட வர்த்தக நிலையங்கள், வீடுகளுக்கு நஷ்டஈடு வழங்க அமைச்சரவை; ரிப்பியாவுக்கு அனுமதி வழங்கியிருக்கிறது.

ஜூலை 26 வன்செயல்களில்

## ரிப்பியா வழங்கும்

பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குவது என்று அமைச்சரவை ஏற்கனவே கொள்கையளவில் தீர்மானித்திருந்தது.

இது சம்பந்தமான செய்தி தினபதியில் பிரத்தியேகமாக பிரசுரிக்கப்பட்டதும் தெரிந்ததே.

தற்பொழுது பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்பட்ட நட்டங்களுக்கு முற்பணமாக ஒரு தொகையை முதலில் வழங்கும்படி அமைச்சரவை ரிப்பியாவைக் கேட்டிருக்கிறது.

ரிப்பியா தலைவர் ரியர் அட்மிரல் ஏ. டபிள்யூ. எச்- பெரேரா திருமலையில் ஜூலை 26 இல் பாதிக்கப்பட்டவர்கள் சங்கத்தின் தலைவர் ஜனாப் ஏ- சி. அலி அக்பருக்கு மகஜர் ஒன்றை அனுப்பியிருந்தார். அதில் நட்டஈடாக வழங்கப்படவிருக்கும் பணத்தின் ஒரு பகுதியை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க ரிப்பியாவுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கி இருக்கிறது — என்ற தகவலை அவர் வெளியிட்டிருக்கிறார்.

ரிப்பியா கேட்டுக் கொண்ட தகவல்களை அனுப்பியவர்களுக்கு இந்த முற்பணம் உடனடியாக வழங்கப்படும் என்றும் —

உரிய தகவல்களைத் தரத் தவறியோருக்கு அவற்றைச் சமர்ப்பித்த பின்னரே முற்பணம் வழங்கப்படும் என்றும் ரிப்பியாத் தலைவர் ரியர் அட்மிரல் ஏ. டபிள்யூ. எச்- பெரேரா அறிவித்திருக்கிறார்.

பெரும்பாலும் நட்டஈடாக வழங்கப்படவிருக்கும் பணத்தில் மூன்றில் ஒரு பகுதி முற்பணமாக வழங்கப்படலாம் என்றும் தெரிகின்றது. (எ—287)

## மிளகாய் செய்கை பாதிப்பு

கெக்கிறுவ, ஜூன் 25

கலாவெவப் பகுதியில் சுமார் இரண்டாயிரம் ஏக்கருக்கு மேல் மிளகாய்ச் செய்கை இலைக் குருமன் நோயினால் பாதிப்படைந்துள்ளன.

கிருமி நாசினிகளை நோய் ஒழிப்பின் பொருட்டு பிரயோகித்த போதிலும் பலன் கிடைக்கவில்லையென விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (எ—158)

## பாடசாலைகளில் பொதுப் பரீட்சை

புங்குடுதீவு, ஜூன் 25

யாழ்- மாவட்டப் பாடசாலைகளில் கல்வி பயிலும் 6ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு விஞ்ஞானம், கணிதம் ஆகிய இரு பாடங்களிலும் பொதுப் பரீட்சையொன்று நடைபெறும்.

தொண்டமானாறு வெளிக்கள நிலையம் யாழ். கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் இப்பரீட்சையை நடத்தவிருக்கிறது.

ஜூலை மாதம் 18, 19ஆம் திகதிகளில் இப்பொதுப் பரீட்சை நடைபெறும்.

இதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 26ஆம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படுமென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. (எ—240)

# மொனருகலையில் மாபெரும் கஞ்சா வேட்டை

பண்டாரவளை, ஜூன் 25

மொனருகலை பிரதேசத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு அனுப்புவதற்குத் தயாராக வைக்கப்பட்டு இருப்பதாகக் கூறப்படும் பெருந்தொகையான கஞ்சா பொலீஸாரால் கைப்பற்றப்பட்டது. அத்தோடு 33 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.


பன்னிரண்டு கோடி பதினாறு லட்சத்து அறுபதாயிரம் கிறெயின் காய்ந்த கஞ்சாவையே மொனருகலைப் பொலீஸார் இந்த வேட்டையின் போது கைப்பற்றினர்.

சந்தேக நபர்கள் 33 பேரும் மொனருகல மாவட்ட நீதிபதி ஜனாப் ஏ. எம். பாரூக் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

மொனருகலை பொலீஸ் வரலாற்றில் இவ்வளவு பெருந்தொகையான கஞ்சா கைப்பற்றப்பட்டது இதுவே முதல் தடவையாகும் எனக் கூறப்படுகிறது-

கண்டி, கொழும்பு, பதுளை, யாழ்ப்பாணம், மன்னார், நீர்கொழும்பு போன்ற இடங்களுக்கு அனுப்புவதற்காக இவை தயார் செய்யப்பட்டிருந்தன.

சாக்கு மூடைகளில் பொதி செய்யப்பட்டிருந்த நிலையிலேயே பொலீஸார் அவற்றைக் கைப்பற்றினர். (எ—39)



ஒன்பது மாகாணங்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும் சர்வ மதத் தலைவர்கள் பங்குபற்றிய கூட்டம் ஒன்று, வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. சர்வமத ஐக்கிய நிறுவனம் இக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. சர்வ மதத் தலைவர்கள் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தபோது இப்படம் எடுக்கப்பட்டது. (சு—ச)

## பாடசாலைகள்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பாடசாலைக் கருமங்கள் சாதாரண நாட்களைப் போல், நேற்றும் சுமுகமாக நடைபெற்றன என்று, பிராந்திய கல்விப் பணிப்பாளர்கள், கல்வி அமைச்சுக்கு அறிவித்திருந்தனர்.

மாணவ, மாணவியர் வழமை போல் பாடசாலைகளுக்கு வந்திருந்தனர். ஆசிரியர்களும் சமுகமளித்திருந்தனர்.

பெரும்பாலான மாணவர்களுடன் அவர்களின் பெற்றோரும் நேற்று பாடசாலை வந்திருந்தனர். அவர்கள் பாடசாலைகளுக்கு வெளியே கூட்டம் கூட்டமாகக் காணப்பட்டனர்.

மாத்தறை தெலிஜவலை மகா வித்தியாலயத்திற்குள் சிலர் அத்துமீறி நுழைந்தனர். ஆசிரியர்களும், பெற்றோர்களும் தலையிட்டதை அடுத்து அவர்கள் அங்கிருந்து சென்று விட்டனர்.

தங்காலை மகா வித்தியாலயத்தை இவ்வார இறுதிவரை மூட கல்வி அமைச்சு தீர்மானித்திருக்கிறது.

பாடசாலை மாணவர்களை தூண்டி விடுவதற்கு சிலர் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். அவர்கள் கைது செய்யப்படும்வரை கொழும்பில் தொடர்ந்து பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கும் என, கொழும்பு பிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ் மா அதிபர் தெரிவித்தார்.

தெமட்டக்கொடையில் சுவரொட்டிகளை ஒட்டிய பலர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்போர் தொடர்பாக விழிப்பாக இருக்குமாறு பொலீஸார் பணிக்கப்பட்டனர். (த—மு)

## கொழும்பு பெரியாஸ்பத்திரி

# அதிகாலையில் நோயாளருக்கு ரேஸ் தாள் விநியோகம்

கொழும்பு, ஜூன் 26

## பொலிஸ் நிலையம் மீது...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வினரை நான் கேட்டுக் கொண்டேன்.

அதன் பின்னர் கண்டி பிரதி பொலீஸ் மா அதிபருக்கும் மற்றும் உயர் அதிகாரிகளுக்கும் நான் இச்சம்பவம் பற்றி அறிவித்தேன்.

அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக கூறினர்கள்.

தில் ஒளிந்திருக்க நேர்ந்ததில்லை.

அன்று மிகவும் பயங்கரச் சூழ்நிலை இருந்ததை உணர்ந்து கொண்டேன்.

அந்தப் பயங்கர நிலையின் விளைவு இரவு 11.30 மணிக்கு அறிந்து கொள்ள முடிந்தது. மருத்துவபீட மாணவர் ஒருவர் இறந்து விட்டார் எனவும், இறந்தவர் பத்மசிறி என்றும் தெரிய வந்தது. மற்றும் ஒரு மாணவ

விடுத்தேன்.

எனது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தைப் பாதுகாப்பது கப்புறு பண்டா என்ற நபர் ஆவார்.

மாஜிஸ்திரேட்:— கப்புறு பண்டா உங்களுக்கு ஏதாவது கூறினரா?

சாட்சி:— அவரும் பல்கலைக் கழக மாணவர்கள் கற்களை வீசுகின்றனர் என்றே சொன்னர்.

பீடத்தில் நான்கு மின் விளக்குகளும், புல்வெட்டும் நான்கு இயந்திரங்களும் களவாடப்பட்டதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

இத் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு இருப்பதால் இது குறித்து மேலும் எதுவும் சொல்வதற்கில்லை. இது தவிரவும் கமெராக்கள், டிப் சுவிட்சுகள் போன்றவைகளும் இங்கு திருடப்பட்டுள்ளன.

1971 ஆம் ஆண்டு ஏப்ரல் கிளர்ச்சியின் போது இங்கு

மாணவர் எப்போதாவது உங்களைச் சந்தித்திருக்கிறரா?

சாட்சி:— நான் அவரைக் காணவும் இல்லை; அவர் என்னைச் சந்திக்கவும் இல்லை.

மாஜிஸ்திரேட்:— இந்த மாணவர் பல்கலைக்கழகத்துக்கு எப்படித் தெரிவு செய்யப்பட்டார்?

சாட்சி:— இவரது மரணத்துக்குப் பின்னர், இவரது சுய விவரக் கோவையை நான் பரிசீலனை செய்தேன். பிரதேச வாரியாக இவர் தெரிவு செய்யப்பட்டிருப்பதுடன் 280 புள்ளிகளைப் பெற்றிருந்தார்.

ஆனாலும், அண்மையில் இடம்

# ரேஸ் தாள் விநியோகம்

கொழும்பு, ஜூன் 26

கொழும்பு பெரியாஸ்பத்திரியின் சில வார்டுகளில் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களுக்கு அதிகாலையிலேயே "ரேஸ்" பந்தயத் தாள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

நோய்களுக்குச் சிகிச்சை பெற வந்த நோயாளர்களுக்கு "வார்டு"களிலும் தானும் நிம்மதி இல்லை.

ரேஸ் பந்தயக்காரர்கள் பந்தய முடிவுகளை அறிவிக்கும் ரேஸ் தாள்களை நோயாளர்களின் கட்டில் வரை வந்து விநியோகம் செய்து விட்டுச் செல்கின்றனர்.

அதிகாலையில் இந்த விசேட "டிலிவரி" சுறுசுறுப்பாக நடைபெறுகிறது.

ரேஸ் எழுதும் "ஓலண்ட்" (சிட்டுகளும்) துண்டுகளும் சேகரிக்கப்பட்டு "புக்கி"களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

இந்த ரேஸ்காரர்கள் அதிகாலை வேளைகளில் ஆஸ்பத்திரிக்குள் எப்படி நுழைகிறார்கள்? ரேஸ் போடும் நோயாளர்களை எப்படி அறிந்து வைத்து இருக்கிறார்கள்?

இவை ஏனைய நோயாளிகளுக்கு மிக ஆச்சரியமாகவே இருந்து வருகிறது. (எ–7)

---

அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக கூறினர்கள்.

கல்வீச்சுக்கு உள்ளான பொலீஸ் நிலையத்துடன் நான் தொடர்பு கொள்ள முயற்சித்த போது அங்கிருந்து பதில் வர ஐந்து நிமிடங்கள் சென்றன. ஏன் இவ்வளவு நேரம்? என கேட்டேன். "கற்கள் இப்பொழுதும் விழுந்து கொண்டிருக்கின்றன. நான் இவ்வளவு நேரமும் மலசலகூடத்தில் ஒளிந்து கொண்டிருந்தேன்" என தொலைபேசி இணைப்பு ஊழியர் பதில் அளித்தார்.

பலத்த சத்தமும், பெரும் இரைச்சலும் தொலைபேசி ஊடாக எனக்குக் கேட்டன.

இதற்கு முன்னர் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தொலைபேசி இணைப்பு ஊழியர் மலசல கூடத்

மருத்துவபீட மாணவர் ஒருவர் இறந்து விட்டார் எனவும், இறந்தவர் பத்மசிறி என்றும் தெரிய வந்தது. மற்றும் ஒரு மாணவருக்கு காயம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக உயர் கல்வி அமைச்சின் அதிகாரிகளுடன் நான் கலந்துரையாடினேன்.

பல்கலைக்கழக வளவில் பெரும் எண்ணிக்கையில் பொலீஸார் இருந்ததாலும் மாணவர்கள் போராடத் தயாராக இருந்ததாலும் பல்கலைக்கழகத்தை மூடுவதற்கு நான் முடிவு செய்தேன்.

மூடப்பட்ட அறிவித்தலின் பின்னரும் சில மாணவர்கள் அங்கிருந்து வெளியேறவில்லை. பேராசிரியர் டாக்டர் அலுவிகாரையைக் கொண்டு ஒலி பெருக்கி மூலம் மாணவர்களை வெளியேறுமாறு கோரிக்கை

கூறினாரா?

சாட்சி:— அவரும் பல்கலைக்கழக மாணவர்கள் கற்களை வீசுகின்றனர் என்றே சொன்னார்.

ஏ. எஸ். பி. திரு. செனவிரட்ன:— சில மாதங்களுக்கு முன்னர் கில்டா ஒபேசேகரா விடுதியில் மாணவர் ஒருவரைச் சந்திக்க வந்த ஒருவரது மோட்டார் கார் தீவைக்கப்பட்டது தெரியுமா?

சாட்சி:— தனிப்பட்ட முறையில் எனக்குத் தெரியாது. எனினும் பின்னர் தெரிந்து கொண்டேன்.

பொதுப் பாதையில் ஓடிக் கொண்டிருந்த ஒரு பஸ் கண்டக்டரின் காற் சட்டையை மாணவர்கள் கழட்டியதாகவும் புகார் செய்யப்பட்டிருந்தது.

தமிழ் மாணவர்கள் 1,000 பேர் இங்கு கல்வி கற்று வருகிறார்கள். இவர்களில் சிலர் பல்கலைக்கழக விடுதிகளிலும், வெளியில் உள்ள வீடுகளிலும் வசிக்கிறார்கள்.

இவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க என்னிடம் உதவி கேட்கப்பட்டது. எனினும் பல்கலைக்கழகப் பாதுகாப்புப் பிரிவிடம் இவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் சக்தி இருக்கவில்லை.

மாஜிஸ்திரேட்: மோட்டார் வாகனத்தைத் தீவைத்தது, பஸ் கண்டக்டரின் காற்சட்டையைக் கழற்றியது போன்ற சம்பவங்களை மாணவர்கள் ஏன் செய்தார்கள்?

சாட்சி:— சம்பவங்கள் தொடர்பாக சில மாணவர்களுக்கு எதிராக சாட்சியங்கள் அளிக்கப்படுவதாலும், வேறு சில காரணங்களாலும் மாணவர்கள் சிலர் இப்படி நடந்து கொள்கிறார்கள்.

அண்மையில் பொறியியல்

சுவிட்சுகள் போன்றவைகளும் இங்கு திருடப்பட்டுள்ளன.

1971 ஆம் ஆண்டு ஏப்ரல் கிளர்ச்சியின் போது இங்கு குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்தது எனக்குத் தெரியும். பல்கலைக்கழகக் கட்டடங்களுக்குள்ளேயே குண்டுகள் தயாரிக்கப்பட்டன என்றும் அறிந்தேன். இக் காலப் பகுதியில் மலையகப் பகுதி கிளர்ச்சிக்காரர்களின் மத்திய நிலையமாக பல்கலைக்கழகம் இருந்தது என்பதும் எனக்குத் தெரியும்.

பல்கலைக்கழகப் பாதுகாப்புப் பிரிவுக்கு 3 பெட்டன்கள் (பொல்லு) மாத்திரமே உண்டு. பாதுகாப்புப் பிரிவினர் மாணவர்களோடு போராட்டத்தை எதிர்பார்ப்பதில்லை.

பேராசிரியர் டயஸ் கடத்தல் சம்பவம் போன்ற சம்பவங்களில் கூட உபவேந்தர் என்ற வகையில் என்னால் கலவரங்களை அடக்க முடியவில்லை. அவ்வாறான கலவரங்களின் போது அவற்றை அடக்கக் கூடிய பேராசிரியர்கள் ஒருவரும் இருக்கவில்லை.

மிகவும் பலம் வாய்ந்த ஒரு உபவேந்தரான சேர். நிக்ளஸ் ஆட்டிகலையின் காலப் பகுதியில் கூட, போராட்டங்களை, கைகலப்புகளைத் தவிர்க்க முடியாமல் போய்விட்டது. பல்கலைக்கழக பாதுகாப்புப் பிரிவுக்கும் இயலாமல் இருந்தது.

ஏ. எஸ். பி. செனவிரட்ன:— அப்படியாயின் குழப்பத்தை அடக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்ன?

சாட்சி:— இவ்வாறான சந்தர்ப்பங்களில் அரசாங்க பாதுகாப்புப் பிரிவு மாத்திரமே இயங்க வேண்டும்.

மாஜிஸ்திரேட்:— காலமான

செய்தேன். பிரதேச வாரியாக இவர் தெரிவு செய்யப்பட்டிருப்பதுடன் 280 புள்ளிகளைப் பெற்றிருந்தார்.

ஆனாலும், அண்மையில் இடம் பெற்ற பல்கலைக்கழக பரீட்சையின் போது இவர் தோற்றிய மூன்று பாடங்களிலும் சித்தி அடையவில்லை.

இவரது மூத்த சகோதரர்களில் இருவர் வேறு பல்கலைக்கழகங்களில் பட்டதாரி மாணவர்கள் ஆவர்.

இப்படி அவர் கூறினார். விசாரணை தொடர்ந்து நடக்கிறது. (த– ந– 105)

---

# வாகனத் திணைக்கள வேலை:
## புதன் முதல் கம்பியூட்டர் மயமாகும்

கொழும்பு, ஜூன் 26

இலங்கை மோட்டார் வாகனத் திணைக்களத்தின் சகல நடவடிக்கைகளும் எதிர்வரும் புதன்கிழமையில் இருந்து கம்பியூட்டர் மயமாக்கப்படும்.

திணைக்களத்தின் வேலைத் திட்டங்களை, ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் கம்பியூட்டர் மயமாக்குவதற்கு, பல லட்ச ரூபா செலவிடப்பட்டிருக்கிறது.

இவ்வேலைத் திட்டத்தில் 600,000 சாரதி அனுமதிப்பத்திரம், 400,000 பதிவுச் சான்றிதழ்கள், அனுமதிப் பத்திரம் புதுப்பித்தல், உரிமை மாற்றப்பத்திரம், வாகன உரிமையை நீடித்தல் போன்றன அடங்குகின்றன.

இதற்கான உடன்படிக்கை ஒன்றும் அன்றைய தினம் மோட்டார் வாகனத் திணைக்கள ஆணையாளரினால் கைச்சாத்திடப்படும்.

மேலதிகமான கவுண்டர்களைத் திறப்பது, மேலதிகமான ஊழியர்களைச் சேர்ப்பது போன்ற நடவடிக்கைகளில் தற்போது திணைக்களம் பல இன்னல்களை எதிர்நோக்கியிருக்கிறது.

இத்திட்டத்தினால் மோட்டார் வாகனத் திணைக்கள நடவடிக்கைகள் யாவும் துரிதப்படுத்தப்படும் என திணைக்கள ஆணையாளர் திரு. வில்பிரட் ஜெயசூரியா தெரிவித்தார். (எ—ர)

---

**அரசாங்க அறிவித்தல்**

எனதிலக்கம் 3/2/6/17/600
1984—06—12

கம்பஹா மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தில்.

**1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டத்தின் 7ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்**

இங்கு கீழ் தரப்பட்டுள்ள உப அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள காணிகளை அரசாங்கம் பொறுப்பேற்க உத்தேசித்துள்ளது. மேலதிக விவரங்கட்கு 1984ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14ஆம் திகதி 301/9 இலக்கம் கொண்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேஷ வர்த்தமானி பத்திரிகையைப் பார்க்கவும்.

**உப அட்டவணை**

உதவி அரசாங்க அதிபர் பிரிவு:— பியகம.

கிராமம் அல்லது ஊர்:— ஹெய்யன்துடுவ.

அமைப்பு:— ...

காணியின் பெயர்:— கட்டுகுறுந்து கஹலந்த, வெரலுகஹவத்த, துனுமடலேகஹவத்த.

நில அளவைப் பட இலக்கம்:— கம். 684.

நிலத் துண்டிலக்கம்:— 1 — 14.

ஏ. எல். எஸ். மல்வன்ன,
கம்பஹ மாவட்டக்
காணி அலுவலகர்.

1558

---

# பிரதமர் பிறந்த தின நிகழ்ச்சிகள்

கொழும்பு, ஜூன் 26

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவின் 60 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு கொழும்பிலும் நாட்டின் பல பகுதிகளிலும் பலதரப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இரத்ததானம் செய்தல், ஆஸ்பத்திரி வார்டுகளைச் சிரமதான மூலம் துப்புரவு செய்தல், நோயாளர்களுக்கும், ஏழைகளுக்கும் உணவு அன்பளிப்புச் செய்தல் போன்ற பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

அனுராதபுர ஜயஸ்ரீ மகா போதியில் சனிக்கிழமையன்று நடைபெற்ற விசேட பூஜையிலும் பிரதமர் பங்கு கொண்டார்.

அனுராதபுர ஜேதவனாராமய பகுதிகளில் சிரமதான வேலையையும் பிரதமர் அங்கு ராரம்பணம் செய்து வைத்தார். (ஐ–7)

---

போதைப் பொருள் பாவனை

# தீவிர கண்காணிப்பு செலுத்த
## கல்கிசைப் பொலீஸார் முஸ்தீபு

கொழும்பு, ஜூன் 26

போதைப் பொருள் பாவனையில் ஈடுபடுவோர் விடயத்தில் கடும் கண்காணிப்புச் செலுத்த கல்கிசைப் பொலீஸார் முன்வந்திருக்கின்றனர்.

அண்மையில் போதைப் பொருள் பாவனையில் ஈடுபாடு உடைய இளைஞரொருவரைப் பொலீஸார் கைது செய்தனர்.

இதையடுத்து ஹெரோயின் வைத்திருந்ததாக மேலும் இரு இளைஞர்களை தெஹிவளையிலும், பஞ்சிகாவத்தையிலும் வைத்துப் பொலீஸாரால் கைது செய்ய முடிந்தது.

இவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 7,500 வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. இதுபற்றி கல்கிசைப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜனப் ரீ. ஜே. மிஸ்கின் தெரிவித்தார்.

கல்கிசைப் பகுதியில் பாவனையில் இருக்கும் ஹெரோயினில் பெருந் தொகையானவை பொரளை, பஞ்சிகாவத்தை ஆகிய இடங்களில் இருந்தே கல்கிசைக்குக் கொண்டு வரப்படுவதாக விசாரணைகள் மூலம் தெரிய வருகின்றது.

வெள்ளவத்தைப் பகுதியும் தற்போது போதைப் பொருள் விற்பனையில் முதலிடம் வகிப்பதாக விசாரணைகள் கூறுகின்றன.

பொலீஸ் கண்காணிப்பில் இருந்து தப்புவதற்காக இப்பகுதி இளைஞர்கள் போதைப் பொருள்களைப் பாவிக்கும் போது புது முறைகளைக் கையாள்வதாகவும் கூறப்படுகிறது.

சிகரெட்டுகளைப் புகையிலை நீக்கி வெற்றாக்கி விட்டு அவற்றுள் ஹெரோயினை நிரப்பிப் பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு மறைமுகமாக போதைப் பொருள் பாவனையில் ஈடுபட்டுள்ளவர்களைத் தேடிப் பிடிப்பதில் தற்போது பொலீஸார் உஷாரடைந்திருக்கின்றனர். (ஐ—8)

---

## கம்உதாவ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைக் கைத்தொழில் அமைச்சர் திரு. விஜேபால மெண்டிஸ் ஆகியோர் இன்று 26 ஆம் திகதி பிரதம அதிதிகளாகக் கலந்து கொள்வர்.

தேசிய இளைஞர் சேவை மன்றம் கலாசார நிகழ்ச்சி ஒன்றை டவர் அரங்கு நிறுவனத்தின் அனுசரணையுடன் இன்று மாலை மேடை ஏற்றும்.

கெக்கிராவ தேர்தல் தொகுதியிலிருந்து ஓர் ஊர்வலமும் நடத்தப்படும். பொம்மலாட்ட நிகழ்ச்சி, சினிமாப் படக்காட்சி ஆகியனவும் நடைபெறும்.

நாளைய விழாவில் ராஜாங்க அமைச்சர் கலாநிதி ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ், பொது நிர்வாக, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மேஜர் மொண்டேகு ஜெயவிக்ரம ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொள்வர். (து–7)

---

## துப்பாக்கி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டார்கள். தைரியமிக்க இ. போ. ச. ஊழியர்கள் பணம் கொள்ளை போகாமல் தடுத்தார்கள்.

எனினும் துப்பாக்கிச் சமரில் இ. போ. ச. அதிகாரி ஒருவர் உயிர் இழந்தார். சப் இன்ஸ்பெக்டரும் மற்ற நான்கு பொலீஸ் கன்ஸ்டபிள்களும் காயமடைந்தார்கள்.

இ. போ. ச. அதிகாரிக்கு தலையினூடாகச் சூடு விழுந்தது. அவர் உடனே இறந்துபோர்ஷர். பயங்கரவாதிகளிலும் பலர் காயமடைந்து இருக்க வேண்டும் என்று நம்பப்படுகிறது.

இராஜாங்க அமைச்சு இந்தத் தகவல்களை வெளியிட்டு இருக்கிறது.

---

ஸ்ரீ-ல-சு- கட்சியில்

# நிபந்தனையின் கீழ் 36பேரை மீண்டும் சேர்க்க முடிவு

கொழும்பு, ஜூன் 26


மஹர தொகுதியின் முன்னாள் எம். பி. திரு. எஸ். கே. கே. சூரிய ஆராச்சி உட்பட, இலங்கை ஐக்கிய முன்னணியிலிருந்து விலகிய 36 பேரும், நிபந்தனை அடிப்படையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

ஸ்ரீ. ல. சு. கட்சியின் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் ரொஸ்மிட் பிளேஸில் மேற்படி கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

பேராதனை பல்கலைக் கழகத்தில் நிகழ்ந்துள்ள அசம்பாவிதங்கள் குறித்து கூட்டத்தில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவங்களின் மூலம் உயிர் துறந்த பல்கலைக் கழக மாணவர் இருவருக்காக அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை ஒன்றும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. (ஏ–11)

கந்தப்பு வாத்தியார்: செல்வா




# கல்முனை மாவட்ட பாடசாலைகளில் அரையாண்டுப் பரீட்சை

நிந்தவூர், ஜூன் 25

கல்முனை கல்வி மாவட்ட பாடசாலை உயர் வகுப்பு மாணவர்களுக்கான அரை ஆண்டுப் பரீட்சை எதிர் வரும் ஜூலை மாதம் நடை பெறவிருக்கின்றது.

கல்முனை கல்வி அலுவலகத்தின் அனுசரணையுடன் நடத்தப்படவிருக்கும் இந்த பரீட்சை எதிர்வரும் ஜூலை 16 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை நடைபெறும்.

பரீட்சை ஒழுங்கு தொடர்பான செயற்குழுக் கூட்டம் அண்மையில் கல்முனை கல்வி அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய கல்முனை மாவட்ட பிரதம கல்வி அதிகாரி ஜனாப் எம். ஐ. எம். ஷெரீப் பின்வருமாறு கூறினார்.

"கண்டிப்பும், கண்காணிப்புமே கற்றலைத் தூண்டி விப்பதும் ஊக்குவிப்பதுமாகும்.

நாம் நடத்தும் பரீட்சைகளும், மதிப்பீடுகளும் ஜி. சி. ஈ, சாதாரண தர, உயர் தரப் பரீட்சைகளுக்கு மாணவர்களின் நிலையை உயர்த்துவதற்கேயாகும்.

எனவே பரீட்சையின் இரகசியம் பேணல், கட்டுப்பாடு, கண்காணிப்பு என்பன சகல நிலைகளிலும் கண்டிப்பாக கடைப்பிடிக்கப்படல் வேண்டும்" — இவ்வாறு கூறினர். (ல—217)

# நான் எம். ஜி. ஆரின் எதிரி அல்லன்

## ராஜேந்தர் கூறுகிறார்

"துணிந்து கலைஞர் கட்சியில் சேர்ந்ததற்கு வாழ்த்துக்கள்" என்று சொல்லி அவர் கையை குலுக்கியவுடன் "பளிர்" சிரிப்பை உதிர்த்த ராஜேந்தர் மள, மளவென்று மடை திறந்த வெள்ளம் போல பேச ஆரம்பித்து விட்டார்.

இப்போது கட்சி ரீதியாக எம். ஜி. ஆர். உங்கள் எதிரி அல்லவா? முன்பு அவரை "என்றும் தேயாத நிலவு" என்று வாயாரப் பாராட்டினீர்களே, இன்றும் உங்கள் கருத்து அதேதானா?"

டி. ராஜேந்தரின் சிவந்த முகம் மேலும் இலேசான சிகப்பை கக்கியது.

"எம். ஜி- ஆர்- என்னை பொறுத்த வரையில் இன்றும் திரையுகில் ஒரு தேயா நிலவு தான். ஆனால் அரசியலில் அவர் நிலை வேறு விஷயம். அவரை நான் எதிர்ப்பதாக எவராவது நினைப்பார்களானால் அது தவறு.

மேடைகளில் ஒருவேளை எங்கள் தலைவர் கலைஞர் கட்டளையிட்டால் எம். ஜி. ஆர்- அவர்களின் அரசியல் கொள்கைகளில் உள்ள ஓட்டை உடைசல்களை நான் அலசுவேன். அவ்வளவு தான். ஆனால் நிச்சயமாக நான் எம். ஜி. ஆரின் எதிரி அல்ல" என்று கூறி முடித்து தலையை ஒரு சிலிர்ப்பு சிலித்தார்.

"இன்னொன்று பாக்கியராஜும், பாரதிராஜாவும் எம். ஜி.ஆர்- பக்கம் போய் விட்டதால் ஒரு போட்டிக்கு புகழுக்கு நீங்கள் எதிர் முகாமுக்கு போயிருப்பதாக சொல்கிறார்களே? அதையாவது ஒப்


தினபதி சினிமா

புக் கொள்கிறீர்களா?" என்றதும்,

"நோ நிச்சயம் ஒப்புக் கொள்ள மாட்டேன். நான் கலைஞரின் ரசிகன். அவரின் தமிழ் மீது காதல் கொண்டவன். அவரை தலைவராக நான் கல்லூரி நாட்களிலேயே ஏற்றவன். இன்று காலம் கனிந்து என் மனம் பூரிப்படைந்திருக்கிறது.

இதற்கும் பாக்கியராஜ், பாரதிராஜா போன்றவாகளின் அரசியல் பிரவேசத்திற்கும் முடிச்சுப் போடாதீர்கள்" என்றார்.

"கடைசியாக ஒன்று" என்று சொல்லி விட்டு "உறவை



# ஹோமியோபதி சிகிச்சை பெற நாடெங்கும் வசதி

## இலவச மருத்துவ நிலையங்களை ஏற்படுத்த சபை நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 26

நாட்டின் சகல பகுதிகளிலும் இலவசமாக ஹோமியோபதி சிகிச்சை செய்து கொள்ளலாம். இதற்கான வாய்ப்புகள் விரைவில் ஏற்படுத்தப்படும்.

மாவட்டங்கள் தோறும் ஒரு பாரிய திட்டத்தின் கீழ் இலவச ஹோமியோபதி மருத்துவ நிலையங்கள் தோற்றுவிக்கப்படும்.

இலங்கை ஹோமியோபதி சபை இத்திட்டத்தினை மேற் கொள்ளவிருக்கிறது.

இலவச ஹோமியோபதி மருத்துவமனைகளை அமைப்பதற்கென மாநகர சபைகள், நகர சபைகள், மாவட்ட அபிவிருத்தி சபைகள் ஆகியவற்றின் உதவிகளை இலங்கை ஹோமியோபதி சபை கோரி இருக்கிறது.

இந்த சபைகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் திட்டமிடப்பட்ட ஹோமியோபதி மருத்துவ நிலையத்திற்கான கட்டட வசதிகளை தந்துதவுதற்கான ஏற்பாடு செய்யும்.

சகல ஹோமியோபதி மருந்துகளும், சேவைகளும் பொது மக்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.

இதே வேளை, ஹோமியோபதி சபை பல ஊக்குவிப்பு திட்டங்களையும் மேற்கொண்டு வருகிறது. இயற்கை மூலிகைகள் மூலம பல தரப்பட்ட நோய்களை குணப்படுத்தக்கூடிய மருந்து வகைகளை உற்பத்தி செய்வதிலும் அது ஆர்வம் காட்டி வருகிறது.

நாட்டில் தனியார் துறையினரால் பல ஹோமியோபதி மருத்துவ நிலையங்கள் செயல் பட்டு வந்த போதிலும் அவற்றுக்குத் தேவையான முழு ஹோமியோபதி மருந்து வகைகளும் இன்னும் அங்கீகரிக்கப் படவில்லை.

நாடெங்கும் இலவச சிகிச்சைகள் அளிப்பதன் மூலம் இந்த மருந்து வகைகளை அங்கீகரிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தலாம், என ஹோமியோபதி சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இதற்கு முன்னோடியாக உள்ளூரில் ஹோமியோபதி மருந்துகளை உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்றையும் சபை மேற் கொண்டு வருகிறது.

ஆரம்ப கட்டமாக மருந்து உற்பத்திக்கான மூலிகை பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. (ல—ஙு—ர)

# கிராமங்களில்





"நான் திரையுலகை ஆட்டிப் படைப்பதற்கு என் எடுப்பான தோற்றம் தான் காரணம்" என்று கூறுகிறரோ சிலுக்கு. படம்: வாழ்க்கை- (ல-10)

## உங்க ஓட்டு யாருக்கு? படத்துக்காக சைலஜா பாட்டு

ஓம் சித்ரா பட நிறுவனம் தயாரிக்கும் "உங்க ஓட்டு யாருக்கு" என்ற படத் துவக்க விழா பாடல் பதிவுடன் ஏ- வி- எம்-மில் நடந்தது-

"உன்னை நெனச்சு சீவி முடிச்சேன் வா மாமா ஆடி நடப்பேன் பாட்டுப் படிப்பேன்- ஏ மாமா...... ஏ மாமா...... வா மாமா" என்ற பாடல் கங்கை அமரன் இசையில் ஒலிப்பதிவானது- புலமைப் பித்தனின் இந்தப் பாட்டுக்கு சைலஜா குரல் கொடுத்தார்-

பாண்டியன், ஜெய்சங்கர், வினுச்சக்கரவர்த்தி, ஒய். ஜி. மகேந்திரன், கவுண்டமணி, கல்லாப்பெட்டி சிங்காரம், ஒய். விஜயா ஆகியோர் நடிக்கும் இதன் கதை — வசனத்தை எழுதி இயக்கும் பொறுப்பை வெங்கட் ஏற்றுள்ளார், ஒளிப் பதிவு கஜேந்திரமணி. (ல-10)

## கதாநாயகியாக ரேவதி நடிக்கும் "அந்தி மழை"

ராஜராஜேஸ்வரி சினி ஆர்ட்ஸ் தயாரிக்கும் "நிலவு சுடுவதில்லை" படப்பிடிப்பு முடிவடைந்தது-

இதையடுத்து தயாரிக்கும் இப்புதிய படத்திலும் சிவகுமார் கதாநாயகனக நடிக்கிருர்.

இந்த படத்துக்கு "அந்தி மழை" என்று பெயர். இதன் கதையை நடிகர் சத்யராஜ் எழுதி இருக்கிருர்.

கதாநாயகியாக ரேவதி நடிக்கிருர். சிவகுமாருடன் ரேவதி நடிக்கும் முதல் படம் இது-



ரேவதி

இதன் திரைக்கதை வசனத்தை எழுதி டைரக்ட் செய்கிருர், கே. ரங்கராஜ். (ஜ—10)

... முடிச்சுப் போடாதீர்கள்" என்ருர்.

"கடைசியாக ஒன்று" என்று சொல்லி விட்டு "உறவை காத்த கிளி" நன்ருக பறக்குமா? என்று கேட்டார்.

"அது அவர்கள் வீட்டுக் கிளி. படத்தை முடித்தவுடன் என் உறவு அதை விட்டு நீங்குகிறது அது பறப்பதும், பறக்காததும் அவர்கள் கைகளில் தான் இருக்கிறது" என்று சொல்லி நிறைவுடன் சிரித்தார்- (ல-10)

## விஜயின் காலில் முள் தைத்தது

அழகி மேனகா தண்ணீர் குடம் சுமந்து, இடை நெளிய நடந்து வர, காலில் முள் குத்தியது. எதிரே வந்த கண்ணன் முள்ளை எடுத்து விட்டான்.

முள்ளை எடுத்து விட்டதும் மேனகா உள்ளத்தில் ஒரு வகை ஆசை எழ, கண்ணனும் கன்னத்தை மெல்லக் கிள்ளினன். அடுத்து என்ன? "கொய்யா கொய்யா கொத்தவரங்கா" என்ற காதல் பாடல் ஒலிக்க இருவரும் (பாண்டியன் – விஜி)



விஜி

காதல் ஆட்டம் போட்டனர்.

இந்த ரசமான காட்சி நாகேஸ்வரி கம்பைன்ஸ் "சுக்கிரதிசை" என்ற படத்துக்காக செங்கல்பட்டை அடுத்துள்ள ஒரு தோட்டத்தில் படமானது.

சங்கர் கணேஷ் இசை அமைக்க, டி. கே. மோகன் டைரக்ட் செய்யும் படம், "சுக்கிரதிசை". எஸ். வி. ராஜி, எஸ். வி. சங்கர் தயாரிக்க, சங்கிலி முருகன், ஒய். ஜி. மகேந்திரன், வனிதா, அனுராதா மற்றும் பலர் நடிக்கிருர்கள்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் இருந்து கொண்டு வரப்பட்ட ஒரு நாய் இந்தப் படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறது. (ஜ—10)

# கிராமங்களில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள வேண்டும்

## திட்டமிடல் பணிப்பாளர் கருத்து

பேசாலை, ஜூன் 25

ஒரு கிராமத்தின் தேவைகளை நிறை வேற்ற நிதி அவசியந்தான். ஆனல் எல்லாத் தேவைகளுக்கும் நிதியை எதிர்பார்க்கக் கூடாது. கிராமங்களின் வளர்ச்சிக்காக கிராமோதய சபைகள் பாடுபட வேண்டும். அப்போது தான் கிராமங்கள் அபிவிருத்தியடையும்.

அடம்பன் உதவி அரசாங்க அதிபர் பிரிவு, கிராமோதய சபைத் தலைவர்கள், உறுப்பினர்களுக்கான இரண்டு நாள் கருத்தரங்கொன்று அண்மையில் நடந்தது.

இதனை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அடம்பன் உதவி அரசாங்க அதிபர் திரு. வி. முருகையா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அடம்பன் உப அலுவலக மண்டபத்தில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் மன்னர் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. கே. பரமேஸ்வரன், மன்னர் திட்டமிடல் பணிப்பாளர் திரு. எஸ். ரங்கராஜா ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டு உரையாற்றினர்கள்.

திரு. முருகையா அங்கு தொடர்ந்து பேசுகையில்,

அரசாங்கம் வரி அறவிடும் அதிகாரிகளை நாடு முழுவதிலும் நியமித்தது.

இவர்கள் மக்களிடமிருந்து வரி அறவிட்டு வந்ததுடன், குற்றத்தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வந்தனர்.

ஆனல் நாட்டில் எந்தவித அபிவிருத்தி வேலைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

காலப்போக்கில் வரி அறவிடும் அதிகாரிகள் பதவி, உதவி அரசாங்க அதிபர் பதவியாக மாறி இன்று மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அலுவலகமாக மாறியிருக்கிறது.

கடந்த 30 ஆண்டுகளுக்கு முன் மக்களின் கருத்துகளை கேட்டறியாமல் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தற்போது மக்களின் கருத்துக்களைக் கேட்டறிந்த பின்பே அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஒரு கிராமத்தின் தேவைகள் அக்கிராமோதய சபைக்கே தெரியும். ஆதலால் அவற்றை நிறைவேற்ற கிராமோதய சபைகள் உதவும்.

இவ்வாறு அவர் கூறினர். (ல-251)



தலைமன்னர் கடற்கரைப் பகுதியில் கரை ஒதுங்கிய வீடியோ டெக்குகள் சிலவற்றை மீனவர்களிடமிருந்து, தலைமன்னர் பொலிஸார் கைப்பற்றினர். கைப்பற்றப்பட்ட "வீடியோ டெக்குகளை பொலிஸார் பார்வையிடுவதை படத்தில் காணலாம். (ல—286)
[படம்: எம். எம். ஹலீம்]

# புங்குடுதீவு பாடசாலைகளில் ஆசிரியர் பற்ருக்குறை

## பெற்ருேர் அதிருப்தி

புங்குடுதீவு, ஜூன் 25

புங்குடுதீவு பாடசாலைகளில் ஆசிரியர் பற்ருக்குறை ஏற்பட்டிருக்கிறது. இதனல் மாணவர்களின் கல்வி நிலை பெரிதும் பாதிக்கப்படுகின்றது.

இவ்வாறு பெற்ருேர் அதிருப்தி தெரிவிக்கிருர்கள்.

புங்குடுதீவு இராசராசேஸ்வரி வித்தியாலயம், இறுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை, சேர். துரைசுவாமி வித்தியாலயம், . குறிகாட்டுவான் அரசினர் த. க. பாடசாலை, ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம் ஆகியவை ஆசிரியர் பற்ருக்குறையால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

அத்துடன் மூன்று ஆசிரியர்கள் இம்மாதத்திலும் ஓய்வு பெற்றிருக்கிருர்கள். அதனல் நிலை மேலும் மோசமாகியிருக்கிறது.

கல்வித் திணைக்களத்திடம் பெற்ருேர் இதுபற்றி பலமுறை முறையிட்டும் எவ்வித பயனும் இல்லையென்று கூறுகிருர்கள். (ல-240)

# சுகதேகியாக வாழ்வதால் நாட்டுக்கும் பயனுண்டு

## கருத்தரங்கில் ஹேரத்

நாத்தாண்டிய, ஜூன் 25

"மனிதனின் நீண்ட ஆயுளுக்கும், சுக வாழ்வுக்கும் போசாக்குள்ள உணவு அவசியம். சுகதேகியான மக்களிருக்கும் நாடுதான் பொருளாதாரத்திலும் முன்னிலையில் இருக்கும்."

தெங்குக் கைத் தொழில் அமைச்சரும், மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைகளின் பிரதி அமைச்சருமான திரு. ஹரல்ட் ஹேரத் இவ்வாறு கூறினர்.

திட்ட அமுலாக்கல் அமைச்சின் ஆதரவில் மாரவில புனித சேவியர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

ஒரு நாடு விஞ்ஞான, தொழில் நுட்பத் துறையில் வளர்ச்சியடைய, அந்நாடு சுகதேகியான மக்களைக் கொண்டிருக்க வேண்டும்.

சுக வாழ்வுக்குப் போசாக்குள்ள உணவு அவசியம். போசாக்குள்ள உணவுப் பொருட்கள் எல்லாம் விலை கூடியவை என்று கூற முடியாது.

உதாரணமாக சோயா அவரை 60 வீத புரோட்டினைக் கொண்டிருக்கிறது. சோயா அவரையையும், சோயா அவரையிலிருந்து தயாரிக்கப்படும் உணவுப் பொருட்களையும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள முடியும்.

கிராமப்புற மக்கள் வீட்டுக்கொரு பசுவை வளர்க்க முடியும். அதனல், இலகுவாகப் பசுப்பாலைப் பெற்றுக் கொள்ளலாம்.

தாய்மார்கள் சிறிய வீட்டுத் தோட்டங்களை செய்து பல்வேறு மரக்கறி வகைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

சோம்பலையும், கவலையீனத்தையும் விட்டொழிக்க வேண்டும் இத்தகைய நடவடிக்கைகளால் சுகதேகியாக வாழலாம்.

இவ்வாறு அவர் கூறினர். (ல-255)

## தெரிவு

சிலாவத்துறை, கொக்குபடையான் கிராமோதய சபைத் தலைவராக புதுவெளியைச் சேர்ந்த ஜனுப் எம். எம். சம்சுதீன் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

புதுவெளி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகவும், புதுவெளி காதிர் காபீர் பள்ளிவாசல் பரிபாலன சபை உறுப்பினராகவும் பணியாற்றி வரும் இவர் ஒரு சமூகத் தொண்டர். (ல—251)

தினபதி

தொலைபேசி:
23882, 23884, 23864
தந்தி: "தினபதி" கொழும்பு
தபால் பெட்டி இல. 1613
5, குணசேன மாவத்தை,
கொழும்பு — 12.

— 1984 ஜூன் 26 —
சுடர் 17 கதிர் 2711

## இனப்பிரச்சினை மற்றி அமெரிக்கா

இலங்கையின் இனப் பிரச்சினையில் அமெரிக்க அரசாங்கத்தின் கருத்து என்ன?

அமெரிக்க ஜனாதிபதி ரொனல்ட் றேகன் அதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி றேகனின் அழைப்பை ஏற்று அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டார்.

அதை அடுத்து ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு ஜனாதிபதி றேகன் கடிதம் ஒன்றை எழுதியிருக்கிறார்.

அந்தக் கடிதத்திலேயே இலங்கையின் இனப் பிரச்சினையில் அமெரிக்க அரசாங்கத்தின் கருத்து என்ன என்பதை ஜனாதிபதி றேகன் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டியது மிக மிக அவசியம்.

அரசியல் தீர்வே தேவை.

பேச்சுவார்த்தை மூலமே அரசியல் தீர்வுகாண வேண்டும்.

இரண்டு இனங்களுக்கு இடையேயும் உண்மையான இணக்கத்தை ஏற்படுத்துவதாக அரசியல் தீர்வு அமைய வேண்டும்.

அப்படியானால் தான் மீண்டும் வன்செயல் வெடித்து இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை சிதைக்காமல் பார்த்துக்கொள்ள முடியும்.

இதுதான் அமெரிக்க அரசாங்கத்தின் கருத்து என்று ஜனாதிபதி றேகன் தமது கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

இனப் பிரச்சினைக்குப்

கள்ள வாக்கினால் வென்றோம் என்றால்

# மீண்டும் தேர்தல் நடத்த எம். ஜி. ஆர். தயாரா?

## கருணாநிதி கேட்கிறார்

காஞ்சிபுரம், ஜூன் 25

கள்ள ஓட்டில் தி.மு.க. ஜெயித்தது என்று கூறும் எம். ஜி. ஆரே இப்போது நடைபெற்ற நான்கு தொகுதிகளிலும் மீண்டும் தேர்தல் நடத்தத் தயாரா? என்று எம். ஜி. ஆருக்குக் கருணாநிதி சவால் விடுத்தார்.

ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டு கருணாநிதி பேசுகையில் கூறியதாவது:—

தோல்விகளைச் சந்திக்கும் நிலை ஏற்பட்டால் கூட கழகம் ஆடாது, அசையாது. ஆனால் அண்ணாநகர், மாயவரம் ஆகிய இரு தொகுதிகளிலும் மார் தட்டி வெற்றி பெற்றுள்ளோம்.

குலோத்துங்க சோழன் போருக்குத் தன்னுடைய தளபதி கருணாகர தொண்டமானை அனுப்பி வைத்தார். அதே போல இந்தக் கருணாநிதி; தானே போட்டியிடாமல் தன்னுடைய தளபதியான சோ. மா. ராமச்சந்திரனை போட்டியிட வைத்தான்.

காஞ்சியை ஆண்ட நரசிம்ம பல்லவன் தானே போட்டியிடாமல் தன்னுடைய தளபதியை போருக்கு அனுப்பி வைத்தார். காஞ்சியின் வரலாறு அப்படி.

காஞ்சி தந்த பேரறிஞர் அண்ணாவை தலைவராகக் கொண்ட கழகம் இது. சோ. மா. ராமச்சந்திரனின் உறுதியும், வலிவும் இல்லையென்றால் கருணாநிதி இல்லை, கழகம் இல்லை.

### கூட்டு

அண்ணா நகர் தொகுதியில் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். 1980 இல் தி.மு.க. சார்பில் நான் போட்டியிட்ட போது 700 வாக்குகள் வித்தியாசத்தில் எனக்கு வெற்றி வாய்ப்புக் கிடைத்தது. அப்போது தி.மு.க்வோடு இ. காங்கிரஸ் உடன்பாடு கொண்டிருந்தது. எப்படிப்பட்ட உடன்பாடு?, தி.மு.க.வும், இ. காங்கிரஸும் சரிபாதியாகப் பிரித்துக் கொண்ட உடன்பாடு.

பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் 23 இடத்திலும், நாங்கள் 16 இடத்திற்கும் தமிழகத்தில் பிரித்துக் கொண்டு போட்டியிட்டோம். அன்றைக்கு 2 இடங்களை அ.தி.மு.க. பெற்றது. நாம் போட்டியிட்ட 16 இடங்களிலும் நாம் வெற்றி பெற்றோம். இ. காங்கிரஸ் போட்டியிட்ட 23 இடங்களில் 21 இடங்களில் அவர்கள் ஜெயித்தார்கள். 2 இடங்களில் வெற்றி வாய்ப்பை இழந்தார்கள்.

### அறிவிப்பு

பாராளுமன்ற இடங்கள் விகிதாசாரப்படி சட்டமன்றத் தேர்தலில் இடம் ஒதுக்க வேண்டும் என்று இங்குள்ள இ. காங்கிரஸ் தலைவர்கள் வாதிட்டார்கள். உடன்பாடு ஏற்பட்டது. 3 மாதங்களே ஆனபோது சில நாட்களிலே இந்த உடன்பாடு முறியக் கூடாதென்று சரிபாதி இடங்களுக்கு ஒத்துக் கொண்டோம்.

நாளைக்கு கூட்டணி ஜெயித்து ஆட்சிக்கு வந்தால் முதல் அமைச்சர் யாரென்று கேட்டார்கள். இங்குள்ள இ. காங்கிரஸ் தலைவர்கள் பதில் தரவில்லை. கருணாநிதிதான் தலைமை வகிப்பார் என்று இந்திரா அறிவித்தார்.

### குத்தினார்கள்

அண்ணா நகரில் வெற்றி பெற்றால்தானே கருணாநிதி முதல் அமைச்சர், என்று எண்ணி என் முதுகில் குத்தி கருணாநிதியை தோல்வி அடையச் செய்ய நினைத்தார்கள். அப்போது அ.தி.மு.கவுக்கு காங்கிரஸ்காரர்கள், வாக்களித்தார்கள்.

அரசியல் மாற்றம் காரணமாக நிலையான ஆட்சியினைத் தருகிறேன் என்று தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதி



கருணாநிதி

காற்றில் பறக்க விட்டு இன்று ஆட்சி புரிகிறார் இந்திரா காந்தி அம்மையார்.

### உறவு முறிந்தது

விலைவாசி ஏற்றத்தைப் பற்றிக் கவலைப்படாமல் அடுத்த தேர்தலைப் பற்றிக் கவலைப்படுகிறார் என்கிற அபிப்பிராய பேதத்தினாலும் இ. காங்கிரஸ் — தி.மு.க. உடன்பாடு இல்லையென்ற நிலையானது. உறவு முறிந்தது.

இந்திய அரசியலை சற்றே திரும்பிப் பார்க்கிறேன். 1969 இல் அண்ணா மறைந்த பிறகு தமிழகத்தை ஆளுகின்ற பொறுப்பை நான் ஏற்றேன். அப்போது அகில இந்திய அளவில் காங்கிரஸ் இரண்டாகப் பிளந்தது. மொரார்ஜி, காமராஜர், ராஜாஜி இப்படிப்பட்டவர்கள் ஒரு பக்கம்.

1971 ஆம் ஆண்டு தேர்தல் வந்தது. தமிழகத்தில் 184 இடங்களில் தி.மு.க. வெற்றி பெற்றதைப் பார்த்து வடக்கே உள்ளவர்கள் யோசித்தார்கள். 234 இடங்களில் 184 இடங்களில் தி.மு.கவுக்கு வெற்றி கிடைத்துள்ளது. பழைய காங்கிரஸ் 15 இடங்களில்தான் வெற்றி பெற்றது. இ. காங்கிரஸுக்கு இடமில்லை.

இந்நிலை நீடிக்குமானால் தமிழகத்தில் இ. காங்கிரஸ் கால் ஊன்ற இடமிருக்காது. எனவே கழகத்தைப் பிளவுபடுத்த வேண்டுமென்று நினைத்தார்கள்.

### பிந்தரன் வாலே

பஞ்சாப்பில் அகாலி தளத்தை வீழ்த்த எண்ணி பிந்தரன் வாலேயைத் தயார் பண்ணினார்கள். பிந்தரன்வாலே யார்? இவர்களால் உருவாக்கப்பட்டவர் தான் இந்த பிந்தரன்வாலே. அன்றைக்கு அகாலி தளத்தை வீழ்த்த பிந்தரன்வாலேயைப் பிடித்தார்கள். இன்றைக்கு என்ன நிலைமை பார்த்தீர்களா?, பிந்தரன்வாலேயின் கதி என்ன ஆயிற்று?

அதே ரீதியான கதையல்ல, அப்படி இருக்குமோ என்று சந்தேகப்படுகிறது.


1971 இல் தொடங்கிய அவர்கள் திட்டம் 1972 அக்டோபரில் வெற்றி பெற்று விட்டது. மத்திய அமைச்சர் மோகன் குமாரமங்கலம் அந்தக் காரியத்தைச் செய்தார். தி.மு.கவைப் பிளக்க யாராவது கிடைக்க மாட்டார்களா என்று நினைத்தார்கள். அதற்கு ராமாவரம் தோட்டத்தில் உள்ள எம். ஜி. ஆர். கிடைத்தார்.

தி.மு.கவில் ஒரு பிளவை ஏற்படுத்தி அந்த இரண்டு கட்சிகளையும் அழிக்கலாமென்ற அவர்களின் கணக்கு தப்பு ஆகிவிட்டது. எப்படித் தப்பு ஆகிவிட்டது என்றால் இரண்டையும் அழிக்கலாமென்று நினைத்தார்கள். ஆனால் நிலைமை என்ன? இரண்டில் ஒன்றுகூட இருந்தால் தான் அவர்களால் வாழ முடியும் என்ற நிலை.

கதிரவனை கார்மேகம் மறைப்பது போல் 1972 முதல் இது வரை சில தோல்விகள் ஏற்பட்டன. திராவிட முன்னேற்றக் கழகம் தனிப்பட்ட கருணாநிதிக்காகவோ, அன்பழகனுக்காகவோ, சாதிக் பாட்சாவுக்காகவோ அல்லது தனிப்பட்டவர்களுக்காகவோ அல்ல. லட்சோப லட்சம் கழக உடன்பிறப்புகள் இருக்கின்ற காரணத்தினால்தான் இதுவரை வளர்ந்து வருகிறது.

இவ்வாறு கருணாநிதி கூறினார்.

(ல— 10)



## தன்னலமற்ற சேவையால்

## செய்தித் திரட்டு

### பெயர் மாற்றம்

வவுனதீவு, ஜூன் 25

பட்டிருப்புத் தொகுதி அம்பிலாந்துறை றோ. க. த. க. பாடசாலை, கலைமகள் வித்தியாலயம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இது தொடர்பான அறிவித்தலை மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் ரி. டி. ஹனன் சகல பாடசாலைகளுக்கும் திணைக்களங்களுக்கும் அறிவித்திருக்கிறார்.

(ல— 318)

### தற்கொலை

நிந்தவூர், ஜூன் 25

சைக்கிள் வாங்குவதற்கு என்று தாயிடம் பணம் கேட்ட வாலிபர் ஒருவர், கேட்ட முழுத் தொகையும் கிடைக்காததால் மனம் உடைந்து தற்கொலை செய்து கொண்டார்.

நிந்தவூர் 4 ஆம் குறிச்சியைச் சேர்ந்த சதக்குலெவ்வை ஜமால் (17 வயது) எனும் வாலிபரே இவ்வாறு மரணத்தைத் தழுவிக் கொண்டார்.

மரண விசாரணை நடத்திய நிந்தவூர்ப்பற்று திடீர் மரண விசாரணை அதிகாரி டாக்டர் ஏ. எல். ஏ. றசாக், தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

(ல— 217)

★

பேசாலை, ஜூன் 25

கொழும்பிலிருந்து தலைமன்னார் நோக்கி வந்து கொண்டிருந்த ரயில் முன் பாய்ந்து முஸ்லிம் இளைஞர் ஒருவர் மரணமானார்.

மன்னார் தாராபுரம் என்னும் இடத்தில் அண்மையில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் சனூன் (21 வயது) என்பவரே மரணமானவராகும்.

இவர் காதலில் ஏற்பட்ட தோல்வியால் மனவிரக்தி அடைந்து மரணத்தைத் தழுவிக் கொண்டதாகக் கூறப்படுகின்றது.

(ல— 251)

### குருபூசை

சித்தன்கேணி, ஜூன் 25

சித்தன்கேணி கலைநகர் நேருஜி கிராம அபிவிருத்திச் சங்கத்தில் திருஞான சம்பந்தர் குருபூசை அண்மையில் நடைபெற்றது.

ஜனாதிபதி ரேகன் தமது கடி தத்தில் தெரிவித்திருக்கிறார்.

இனப் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண வேண்டும் என்பதுதான் எமது அண்டை நாடான இந்தியாவின் கருத்து மாகும்.

ஜனாதிபதி ஜெயவர்த்தன வின் கருத்தும் அதுதான். அதனாலேயே அவர் சர்வ கட்சி மாநாட்டைக் கூட்டி பேச்சுவார்த்தைகள் நடை பெறுவதற்கு ஒழுங்கு செய் திருக்கிறார்.

நிகழ்ச்சி நிரல் தயாரிப்பு, கருத்துப் பரிமாறல், ஆலோ சனைகள் தெரிவித்தல், நிபுணர் குழுக்கள் பரிசிலனை செய்தல் என்று இப்படியே சர்வ கட்சி மாநாடு இழுபட்டுக் கொண்டு போகிறது.

இந்த நிலையில் பேச்சு வார்த்தை மூலம் இனப் பிரச் சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என்று அமெ ரிக்க அரசாங்கத்தின் கருத்தை ஜனாதிபதி ரேகன் தெரிவித் திருக்கிறார்.

அமெரிக்காவின் குரல் தர் மத்தின் குரலாக உலகில் ஒலிக்க வேண்டும் என்று ஜனாதிபதி ஜெயவர்த்தன வெள்ளை மாளிகையில் ஜனாதி பதி ரேகன் அளித்த வரவேற் பில் வாழ்த்துக் கூறினார்.

ஆகவே அவர் தர்மத்தின் குரலுக்குத் தாம் செவி சாய்த்து, பேச்சுவார்த்தை மூலம் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு சர்வ கட்சி மாநாட்டை துரித மாகவும் தீவிரமாகவும் செயற் பட வைப்பார் என்றே எல் லோரும் நம்புகிறார்கள்.

ஜனாதிபதி ரேகன் தமது கடிதத்தில் நாட்டின் பொரு ளாதார அபிவிருத்திக்காக ஜனாதிபதி ஜெயவர்த்தன சரி யான நடவடிக்கைகளை எடுத்து வருவதாகக் கூறிப் பாராட்டும் தெரிவித்திருக்கி றார்.

முந்திய அரசாங்கம் தனி யார் துறையினரிடமிருந்து வர்த்தகத்தைப் பறித்தது. காணியை பிடுங்கிக் கொண் டது. எல்லாவற்றையும் அர சாங்க ஆதிக்கத்தில் கொண்டு வர முனைந்தது.

ஜனாதிபதி ஜெயவர்த்தன தாம் பதவிக்கு வந்த 1977 முதல் தனியார் துறையினரை நாட்டின் அபிவிருத்திப் பணி யில் பூரண பங்கு கொள்ளச் செய்து வருகிறார். இதுதான் சரியான நடவடிக்கை என்று ஜனாதிபதி ரேகன் பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்.

நாட்டில் இன ஐக்கியமும் அமைதியும் இருந்தால்தான் பொருளாதார அபிவிருத்தி சாத்தியமாகும். ஜனாதிபதி ஜெயவர்த்தன இதை நன்கு அறிவார்.

# தன்னலமற்ற சேவையால சிறந்து விளங்கும் பாடசாலை

## மானிப்பாய் மெமோறியல் விழாவில் யாழ். கல்வி அதிகாரி பெருமிதம்

சித்தன்கேணி, ஜூன் 25

ஒரு பாடசாலையின் கட்ட டத்தைப் பார்த்து அதன் வளர்ச்சியையோ, சிறப் பையோ அறிய முடியாது. அங்கு கல்வி பயிலும் மாண வர்களினதும், படிப்பிக்கும் ஆசிரியர்களினதும் நடத்தை யைக் கொண்டே அறியலாம்.

இப் பாடசாலை ஆசிரியர் கள் தமது கடமைகளைக் கருத் திற் கொண்டு தன்னலமற்ற சேவையாற்றி வருகின்றனர். இதனால்தான் இப் பாடசாலை யாழ். மாவட்டத்தில் சிறந்து விளங்குகின்றது. இப் பாடசாலை மேலும் சிறப்புற மாணவர்க ளும், ஆசிரியர்களும், பழைய மாணவர்களும், பெற்றோர்க ளும் ஒழுக்கத்துடன் தொண் டாற்ற முன்வர வேண்டும்.

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் 148 ஆவது ஆண்டு நினைவு தின விழா வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றிய யாழ். கல்வித் திணைக் கள கல்வி அதிகாரி செல்வி ஆர். நவரத்தினசிங்கம் மேற்கண்ட வாறு கூறினார்.

இப் பாடசாலையின் "அழக ரட்ணம் மண்டபத்"தில் மேற் படி பாடசாலை அதிபர் திரு. வி. பொன்னுத்துரை தலைமையில் அண்மையில் இவ் விழா நடை பெற்றது.

செல்வி ஆர். நவரத்தினசிங் கம் அங்கு தொடர்ந்து கூறிய தாவது:—

கடந்த 148 ஆண்டுகளாகக் கல்விப் பணியாற்றி வரும் இப் பாடசாலை, இலங்கையிலேயே குறிப்பிடத்தக்க பழைமையும், பெருமையும் வாய்ந்ததாகும்.

இங்கு கல்வி பயின்ற மாண வர்கள் ஒழுக்கமும், கடமை உணர்வும் உள்ளவர்களாக இலங்கையின் பல பாகங்களில் கடமையாற்றி வருவதால் இப் பாடசாலையின் புகழ் நாடெங் கும் பரவி வருகின்றது.

பணக்காரன், ஏழை, உயர்ந் தவர், தாழ்ந்தவர் என்ற எந்த வித பாகுபாடுகளும் இல்லா மல், சகலரையும் சமமாக மதித்து கல்விப் பணி புரிவதற் காக இப் பாடசாலையை அன்று மிஷனரிமார் ஆரம்பித்தனர்.

மிஷனரிமாரின் நோக்கம் நிறைவேறும் வகையில் இப் பாடசாலை இன்றும் இயங்கி வரு வதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

நாம் சிறிது காலம்தான் ஆசி ரிய சேவையைச் செய்கின்றோம். ஆனால் அந்தச் சிறிது காலத்திற் குள் செய்யும் சேவையானது நீண்ட காலத்துக்கு நிலைத்திருக் கும் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

ஆசிரியப் பணி மகத்தான புனி தமான ஒரு தொண்டு.

ஆசிரியர்கள் அனைவரும் கடமை உணர்வோடு நேர்மை யான முறையில் தமது கடமை களைச் செய்து நன்மதிப்பைப் பெறவேண்டும்.

புத்தகங்களை மௌன ஆசிரி யர் என்று கூறுவார்கள். புத்த கங்களை வாசிப்போர் எந்தவித சிந்தனையுமின்றி அசையாமல் இருந்து வாசிக்கும் போது உல கம் முழுவதையுமே நேரில் காணும் நிலையைப் பெறுகிறார் கள்.

எவ்வளவோ பணத்தைச் செலவு செய்து உலகம் முழுவ தும் சுற்றித் திரிந்து பார்த்து, அனுபவிக்காத எத்தனையோ விடயங்களைப் புத்தகங்கள் மூலம் அனுபவிக்கக் கூடிய சந் தர்ப்பம் ஏற்படுகின்றது.

இத்தகைய நிலையை உருவாக் கும் புத்தகங்கள் பாடசாலை நூல் நிலையங்களில் இடம்பெற வேண்டும்.

வசதியுடையோர் தங்களால் இயன்ற புத்தகங்களை இப் பாட சாலை நூல் நிலையத்திற்கு வாங் கித் கொடுக்க முன்வர வேண் டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

யாழ். கல்வித் திணைக்களக் கல்வி அதிகாரி திரு. சி. இராச நாயகம், மானிப்பாய் வட்டா ரக் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்சயன், உப அதிபர் திருமதி பி. மகாதேவா, ஆசிரியர் டபிள்யூ. ஜீ. அன்னப்பா, திரு. க. திருநாவுக்கரசு, வண. டி. ஆர். அம்பலவாணர், வண. பங் குத் தந்தை கிறிஸ்தோபர், திரு. எம். வைரமுத்து ஆகியோர் உட்பட மற்றும் பலரும் உரை யாற்றினர்.

ஆசிரியர் அ. மு. அருணசலம் வரவேற்புரை நிகழ்த்தினார். விழாவில் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

(ல- 283)

## சேற்றுக்கண்டி முத்துமாரி அம்மன் உற்சவம்

கிளிநொச்சி, ஜூன் 26

சுமார் 5 லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்ட வரலாற்றுப் புகழ்மிக்க சேற்றுக்கண்டி அருள்மிகு முத்துமாரி அம் மன் ஆலய ஆனி உத்தர உற் சவம் இன்று 26 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்களுக்கு நடை பெறும்.

இவ் உற்சவத்தின் போது தீர்த்தம், ஊஞ்சல் திருவிழா, சங்காபிஷேகம் ஆகியன இடம் பெறும்.

(ல- 244)



## ஞானவைரவர் கோயில் உற்சவம்

கொழும்பு, ஜூன் 26

கோண்டாவில் வடக்கு அருள்மிகு ஞான வைரவர் கோயில் வருடாந்த அலங் கார உற்சவம் இன்று 26 ஆந் திகதி செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பத்து தினங் களுக்கு நடைபெறும் இவ் உற் சவத்தில் தினமும் பகல் 12 மணிக்கு விசேட அபிஷேகமும், மாலை சுவாமி வீதி வலம் வரு தலும் நடைபெறும்.

இறுதி நாளான எதிர்வரும் ஜூலை 5 ஆந் திகதி வியாழக் கிழமை நவோத்தர (1008) சங் காபிஷேகமும், அன்னதான மும் இடம்பெறும்.

அன்றைய தினம் மாலை வசந்த மண்டப் பூஜையும், திரு. ஊஞ்சலும், சுவாமி வீதிவலம் வருதலும் இடம்பெறும்.

இவ் உற்சவ கிரியைகள் கோயில் குரு ஈசான சிவாச்சாரி யார் சிவஸ்ரீ கா. இராஜேஸ் வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

(ல-ர)

பிரதேச அபிவிருத்தி அமைச் சர் திரு. செ. இராசதுரையின் பணிப்பைத் தொடர்ந்து இலங்கை பனை அபிவிருத்திச் சபையினால் புலமைப் பரிசில் திட்டம் ஒன்று ஒழுங்கு செய் யப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் இந்தியாவில் பனம் பொருள் கைப்பணி, கைத் தொழில் துறைகளில் பயிற்சி பெறுவதற்கு பயிற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இலங்கை பனை அபிவிருத் திச் சபைத் தலைவர் திரு. கே. நடராசா இப் பயிற்சியாளர்க ளுக்குப் புலமைப் பரிசிலுக்கான பத்திரங்களைக் கையளித்தார். மன்னார் பிரதேசத்திலிருந்து தெரிவான செல்வி எம். சித்தி சனூபா, பனை அபிவிருத்திச் சபைத் தலைவரிடமிருந்து புல மைப் பரிசில் பத்திரத்தைப் பெறுவதைப் படத்தில் காண லாம்.

(ல- தி)

நேருஜி கிராம அபிவிருத் திச் சங்கத்தில் திருஞான சம்பந்தர் குருபூசை அண் மையில் நடைபெற்றது.

மாணவ, மாணவிகள் இப் பூசையை முன்னிட்டு நடத்தப் பட்ட பிரார்த்தனையில் கலந்து கொண்டு பண்ணிசைப் பாடல் களைப் பாடினர்.

(ல- 283)

## வாலிபர் விபத்து

சீனக்குடா, ஜூன் 25

திருகோணமலையில் இருந்து தம்பலகாமம் நோக்கிச் சென்ற பஸ்சிலி ருந்து விழுந்த வாலிபர் அவ்விடத்திலேயே மரண மானார்.

இச் சம்பவம் அண்மையில் அனுராதபுர சந்தியில் நடை பெற்றது.

ஆண்டாங்குளத்தைச் சேர்ந்த முகம்மட் யூசுப் அலி ஜின்னா (வயது 20) என்பவரே இவ் வாறு மரணமானவர்.

மரண விசாரணையை திரு கோணமலை பதில் நீதிவான் திரு. எம். கே. செல்வராஜா நடத்தி னார். விபத்து மரணம் என்று தீர்ப்பு அளிக்கப்பட்டது.

(ல- 54)

## பஸ் சேவை

பண்டாரவளை, ஜூன் 25

பண்டாரவளை நகரிலிருந்து கோணமுட்டாவ (செல்வ கந்தை) தோட்டத்திற்கு மீண்டும் பஸ் சேவை ஆரம் பிக்கப்பட்டு இருக்கிறது.

பாடசாலை மாணவர் களின் நலனுக்காக பண்டாரவளை இ.போ.ச. டிப் போவினால் நடத்தப்பட்டு வந்த இந்த சேவை சிறிது காலம் இடைநிறுத்தம் செய்து வைக் கப்பட்டிருந்தது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பண்டாரவளை மாநிலப் பிரதிநிதி திரு. ஆர். மோகன், டிப்போ அதிகாரி யுடன் தொடர்பு கொண்டு எடுத்த நடவடிக்கையின் பய னாக பஸ் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது.

(ல- 39)

## பாலர் பாடசாலை

சீனக்குடா, ஜூன் 25

சர்வோதய இயக்கத் தால் சீனக்குடாவில் பாலர் பாடசாலை ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

சீனக்குடா பிரதம தபால் கந்தோருக்கு அண்மையில் நடைபெற்ற இத் திறப்பு விழா வில் திருகோணமலை மாவட்ட சர்வோதய இயக்கப் பிரதிநிதிக ளும், மற்றும் பல பிரமுகர்க ளும் கலந்து கொண்டனர்.

(ல- 54)

## புனித ரமழான் சிந்தனைகள்

புனிதமிகு ரமழானில் இஸ் லாத்தின் நாலாவது கடமை யான நோன்பினை நிறைவேற் றிக் கொண்டிருக்கும் இவ்வேளை யில் மூன்றாவது முக்கிய கட மையான "ஸக்காத்" எனும் ஏழை வரி பற்றி சிந்திப்பது ஒவ் வொருவரதும் கடமையாகும்.

அல்லாஹ் அல் குர்ஆனில் அருளுகிறான், "அல்லாஹ்வின் திருப் பொருத்தத்தை நாடி ஸக்காத்தாக நீங்கள் ஏதும் கொடுத்தாலோ (அது அல் லாஹ்விடத்தில் அதிகப்படும்) இத்தகையோர் தாம் (கூலியை) இரட்டிப்பாகப் பெறக் கூடிய வர்கள்.

இஸ்லாத்தின் தொழுகைக்கு எவ்வளவு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு இருக்கிறதோ, அதேயளவு ஸக்காத்துக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டி ருக்கிறது. "நீங்கள் தொழு கையைக் கடைப்பிடித்தொழு குங்கள். ஸக்காத்தும் கொடுத்து வாருங்கள்" (அல்குர்ஆன் 2:43) இவ்வாறு அல்குர்ஆன் கண்டித்தி ரண்டு இடங்களில் தொழுகை யுடன் சேர்த்து ஸக்காத்தும் வலியுறுத்தப்பட்டு இருக்கிறது.

இஸ்லாம் வலியுறுத்தும் ஸக் காத்து எனும் ஏழை வரி, வறு மையைப் போக்கி மக்களி டையே பொருளாதார ஏற்றத் தாழ்வை ஒழிக்கிறது. மக்கள் பிறரிடம் கையேந்தி யாசிக்கும் வழக்கத்தை இல்லாதொழிப்ப துடன் செல்வந்தரிடையே வாரி வழங்கும் வள்ளல் தன்மையை வளர்க்கிறது. ஏழை, பணக் காரர்களிடையே அன்புப் பிணைப்பை ஏற்படுத்தி ஒற்று மையும், சகோதரத்துவமும் வளர வழிசெய்கிறது.

செல்வந்தன், தன் செல் வத்தை ஏழைகளுக்காகச் செலவு செய்வது சமூக சேவை யாக மாறுவதால், அதன் மூலம் தனி மனித சீர்திருத்தத்தையும், ஸக்காத்தைப் பெற்ற எண் ணற்ற வறியவர்களின் வாழ்வு வளம் பெறுவதால் சமுதாய சீர்திருத்தத்தையும் ஸக்காத் [illegible] நாயகம் (ஸல்) நவின்றார்கள், "கொடையாளியை விட்டும் பாவங்கள் அகன்று விடுகின் றன. அவன் சறுகும் போதெல் லாம் அல்லாஹ் அவனுக்கு கை கொடுப்பான். இன்னும் அவன் அல்லாஹ்வுக்கு சமீபித்தவனாக வும், நரகத்துக்கு தூரமானவ னாகவும் ஆகிறான்."

ரமழான் நோன்பு ஏழைகளின் பசிப் பிணியை, அதன் கொடு மையை செல்வந்தர்களுக்கு உணர்த்துகிறது. அவர்களுக்கு உதவ வேண்டுமென்ற ஆர் வத்தை ஏற்படுத்துகிறது.

எனவே வசதி படைத்தவர்கள் தமது கட்டாய கடமையான ஸக்காத் எனும் ஏழை வரியை வழங்கிட முன்வர வேண்டும். அதன் மூலம் ஏழைகளின் துயர் களைந்து சமூக ஏற்றத் தாழ்வினை நீக்க வழிவகுக்க வேண்டும்.

ரமழானே அதற்கு ஏற்ற மாதம். எனவே உடன் செயல் பட முன்வருவோமாக!

(99)

## கடத்தப்பட்ட விமானம் ஈரான் திரும்பியது

பிரான்ஸ், ஜூன் 25

கடந்த வாரம் பிரான்ஸுக்கு கடத்திச் செல்லப்பட்ட ஈரானிய விமானம், கடந்த ஞாயிற்றுக்கிழமை டெஹ்ரானுக்குத் திருப்பி அனுப்பப்பட்டது.

பிரெஞ்சு அதிகாரிகள் இந்த விமானத்தை ஈரானியத் தூதரக அதிகாரிகளிடம் சனிக்கிழமையன்று கையளித்தனர். இந்த விமானத்தைத் திருப்பிக் கொண்டு செல்ல விசேட விமான ஓட்டிகள் ஈரானிலிருந்து வந்து சேர்ந்தனர்.

இதில் வந்த 4 கடத்தல்காரர்களும் பிரான்சில் தங்கியுள்ளனர். அரசியல் புகலிடத்துக்கான கோரிக்கை பற்றிய தீர்மானத்தை அவர்கள் அங்கு எதிர் பார்த்துக் கொண்டிருப்பதாக கூறப்படுகிறது.

(ந)

## சுரங்க விபத்தில் இருவர் மரணம்

ஜொஹானஸ்பேர்க், ஜூன் 25

தென் நமீபியாவில் நடைபெற்ற சுரங்க விபத்தொன்றில் இரண்டு குடிமக்கள் கொல்லப்பட்டனர். தென் ஆபிரிக்க வானொலி நேற்று இதனை அறிவித்தது.

அங்கோலாவின் எல்லையில் சுரங்கங்கள் உள்ள பகுதியில் இவர்கள் பயணம் செய்த வாகனம் சென்ற போது இந்த விபத்து ஏற்பட்டது.

ஒரு ஆணும், ஒரு பெண்ணும் இறந்துள்ளனர். மேலும் இரு பெண்கள் காயமுற்றனர்.

(ந)



நிக்கராகுவா இடதுசாரி அரசாங்கத்தின் மக்கள் இராணுவம், அமெரிக்க ஆதரவைப் பெற்ற கிளர்ச்சியாளர்களுடன் சண்டையிடுவதற்குத் தயாராவதைப் படத்தில் காணலாம். (ந)

# வளைகுடாவில் மீண்டும் கப்பல் தாக்குதல்

## 6 வளைகுடா நாடுகள் பாதுகாப்பு ஆலோசனை

பாஹ்ரேய்ன், ஜூன் 25

**இரண்டு வார காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வளைகுடா எண்ணெய்க் கப்பல் தாக்குதல்கள் நேற்று மீண்டும் தொடர்ந்தன. கிரேக்க கப்பலொன்றின் மீது ஈராக் நேற்று விமானத் தாக்குதலை நடத்தியது.**

வளைகுடா பிரதேசத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமுகமாக வளைகுடா கூட்டுறவுக் கவுன்சிலைச் சேர்ந்த ஆறு நாடுகளின் அவசரக் கூட்டம் ஒன்று ரியாத்தில் நடைபெற்ற சில மணி நேரத்துக்குள்ளேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

ஈராக்கிய விமானங்கள் நான்கு கடல் இலக்குகளைத் தாக்கியதாக ஈராக்கின் இராணுவப் பேச்சாளர் ஒருவர் கூறினார். ஆனால் கிரேக்க கப்பலின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் மட்டுமே தனிப்பட்ட முறையில் உறுதி செய்யப்பட்டது.

ஈரானிய எண்ணெய் ஏற்றுத் துறையான கார்க் தீவில் எண்ணெய் ஏற்றிக்கொண்டு புறப்படும் போதே கிரேக்கக் கப்பல் தாக்கப்பட்டது. ஆனால் இத் தாக்குதலின் போது கப்பல் அதிக சேதம் அடையவில்லை. கப்பல் பின்னர் டுபாய் நோக்கிச் சென்று கொண்டிருப்பதாக கப்பல் வட்டாரங்கள் கூறின.

இத் தாக்குதலைத் தொடர்ந்து வளைகுடாவில் ஈரானிய ஏற்றுத் துறைகளான கார்க் தீவுக்கும், புஸ்ஸேர் துறைமுகத்துக்கும் செல்லும் கப்பல்களின் காப்புறுதி விகிதம் திடீரென உயர்ந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை குடிமக்கள் கேந்திரங்களின் மீது குண்டுத் தாக்குதல்களை நிறுத்துவதற்காக அமெரிக்காவின் அனுசரணையிலான ஈரான், ஈராக் ஒப்பந்தம் கப்பல் போக்குவரத்துக்கும் விஸ்தரிக்கப்படலாமென வளைகுடா நாடுகளின் அதிகாரிகள் நம்புகின்றனர்.

ஈராக், வளைகுடாவில் கப்பல் தாக்குதல்களை மேற்கொள்ளாவிட்டால் ஈரானும் தாக்குதல்களை மேற்கொள்ளாதென ஈரானிய நாடாளுமன்ற சபாநாயகர் அலி அக்பர் ரப்சன் ஜானி கூறினார்.

ஆனால் ஈராக் யுத்தப் பிரதேசமாக பிரகடனப்படுத்தியிருக்கும் எல்லைக்குள் வரும் எந்தக் கப்பலும் தாக்கப்படுமென ஈராக் கூறியுள்ளது. இந்தப் பிரதேசத்தில் கார்க் தீவும், புஸ்ஸேர் துறைமுகமும் அடங்குகின்றன.

இதேவேளை சவூதி அரேபியா, குவைத், பாஹ்ரேய்ன், கட்டார், ஐக்கிய அரபுக் குடியரசு, ஓமான் ஆகிய நாடுகளின் இராணுவத் தளபதிகள் ஒன்று கூடி வளைகுடா யுத்தத்திலிருந்து எண்ணெய்க் கப்பல்களைப் பாதுகாக்கும் வழிமுறைகள் பற்றி பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

## நோய்களுக்கு அசுத்தமான குடிநீர் காரணம்

நேபாளத்தின் தலைநகரான காட்மண்டுவில் தைபாய்டு, மற்றும் வயிற்றுப் போக்கு ஆகிய நோய்கள் அதிக அளவில் பரவி வருவதற்கு அசுத்தமான குடிநீர் பிரதான காரணங்களில் ஒன்றாக இருப்பதாக நேபாள வைத்திய ஒன்றியத்தின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

நகரின் பிரதான நீர் விநியோகக் குழாய்கள் சாக்கடை நீர் வெளியேற்றப்படும் இடங்களுக்கு அருகே அமைந்துள்ளன. இக் குழாய்களில் பல இடங்களில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதால் நீர் அசுத்தப்படுவதாக அவர் கூறினார்.

காட்மண்டுவில் கடந்த சில மாதங்களில் ஏறக்குறைய 100 பேர் வரை மேற்படி வியாதிகளினால் இறந்துள்ளனர். (ந)

வெளிநாட்டு

## தூதரகங்களுக்கு எதிராக அமெ. ராஜதந்திர பதிலடி

வாஷிங்டன், ஜூன் 25

புதிய ராஜதந்திர பதிலடிக் கொள்கையின் கீழ் அமெரிக்க ராஜாங்க திணைக்களம் மாற்று நாட்டு தூதரகங்கள் சிலவற்றின் தொலைபேசி இணைப்புகளைத் துண்டித்தல், பயணங்களுக்கு கட்டுப்பாடு விதித்தல் காணிக் கொள்வனவைத் தடை செய்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

1982 ஆம் ஆண்டின் பரஸ்பர ராஜதந்திர சட்டத்தின் கீழ் கீழ்க்காணும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக ராஜாங்க திணைக்களம் நாடாளு

...

இருந்த தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. பிராக்கிலுள்ள அமெரிக்க தூதரகத்தின் இரண்டாவது இல்லத்துக்கு தொலைபேசி இணைப்பு கிடைத்தவுடன் துண்டிக்கப்பட்ட தொலைபேசிகள் மீண்டும் இணைக்கப்படும்.

சோவியத் அதிகாரிகளுக்கும், லிபியா, கியூபா, காம்பூசியா, ஈரான் ஆகிய நாட்டுத் தூதுவர்களுக்கும் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. பயணங்களுக்கான டிக்கெட்டுகளையும், தங்குமிடங்களையும் ராஜாங்க திணைக்களத்தின் மூலமாகவே பெற வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது.

...கான கப்பற் சரக்குகள் 11 மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்பதே இதற்குக் காரணமாகும்.

ரஷ்யாவின் ஐ. நா. தூதரகத்துக்கு நியூயோர்க்கில் 8 வீடுகளை வாங்க வேண்டுகோளை மறுத்தல். மாஸ்கோவில் அமெரிக்காவுக்கு காணி வாங்க முடியாதிருப்பதாலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வாஷிங்டனில் வீட்டுக் கட்டடம் ஒன்றை வாங்குவதற்கான சீன வேண்டுகோளை மறுத்தல். சீனாவில் காணி பெறுவதில் உள்ள பிரச்சினைகளுக்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

## கதிரியக்க கழிவு குவிப்பதற்கு நகரவாசிகள் எதிர்ப்பு

### மலேசியாவில் முதலாவது அணு எதிர்ப்புப் போராட்டம்

பபான், மலேசியா, ஜூன் 25

மலேசியாவில் பபான் நகரத்தில் உள்ள 1,500 குடிமக்கள் தமது நகருக்கு அருகே கதிர் இயக்க கழிவுகள் குவிக்கப்படுவதற்கான திட்டத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்துகின்றனர். மலேசியாவின் முதலாவது பெரிய அணு எதிர்ப்புப் போராட்டமாக இது மாறி வருகிறது.

...னித்ததாக பபான் நகர செயற் கமிட்டியின் தலைவர் கூறினார். (ந)

## மொண்டேலுக்கு கென்னடி ஆதரவு

வட ஒக்ஸ், மினெசோட்டா, ஜூன் 26

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்

ராஜாங்க திணைக்களம் நாடாளுமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

வாஷிங்டனில் உள்ள இரு செக்கோஸ்லேவேக்கிய தூதுவர்களின் இல்லங்களுக்கு

மாகவே பெற வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது.

ஈராக்கின் கப்பற் சரக்குகளைத் தாமதித்தல், பாக்தாத்தில் அமெரிக்கத் தூதரகத்துக்

இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

துருக்கி, இந்தியா, அல்ஜீரியா ஆகிய நாடுகள் காணி வாங்குவதற்கான அங்கீகாரத்தைக் காலந் தாழ்த்துதல். இந்த நாடுகளில் அமெரிக்கத் தூதரகங்கள் காணி பெறுவதில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவில் இருப்பதாக மதிப்பிடப்படும் வெளிநாட்டுத் தூதுவர்களின் 24,000 கார்களும் அமெரிக்காவில் சிவப்பு, வெள்ளை, நீல இலக்கத் தகடுகளைக் கொண்டிருக்க வேண்டும் என்ற புதிய அமெரிக்கத் திட்டமொன்றைப் பற்றியும் அறிக்கையில் மேற்கோடிட்டு காட்டப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் வாகனம் ஓட்டும் சட்டங்களை மீறும் தூதுவர்களுக்கு வாகனமோட்டும் சலுகைகள் மறுக்கப்படுவதுடன் இலக்கத் தகடுகள் பறிமுதல் செய்யப்படும்.

இவ்வாறு வெளிநாட்டுத் தூதரகங்களின் அலுவலகத்தின் தலைவர் ஜேம்ஸ் நோவன் கூறினார்.

விபத்துக்குள்ளாகி பாத்தியதை கோருவோரிடமிருந்து தூதுவர்களுக்கு இதுவரை விலக்கு அளிக்கப்பட்டு வந்துள்ளது. ஆனால் இனி தூதுவர்கள் விபத்துக்களில் உள்ளாகும் இடத்து அவர்களுக்கு எதிராக அமெரிக்க குடிமக்கள் பாத்தியதை கோரக் கூடிய புதிய காப்புறுதித் திட்டம் விரைவில் அமுலுக்கு வருமென அவர் மேலும் குறிப்பிட்டார்.

(ந)

புப் போராட்டமாக இது மாறி வருகிறது.

குடிமக்களின் பயத்தைப் போக்க அரசாங்கம் மேற்கொண்டு வரும் முயற்சியில் பிரதம மந்திரி டாருக் சேரி மஹாதிர் மொகம்மட்டும் சேர்ந்துள்ளார்.

எதிர்ப்புப் பிரசாரத்தில் பெராக் மாநிலத்தினரும், எதிர்காலத்தில் எவ்விதமான அணு சக்தி திட்டங்களும் நடைபெறுவதை எதிர்க்கும் இயக்கங்களும் பபான் நகர மக்களுடன் துணை சேர்ந்துள்ளன.

கழிவுப் பொருட்களைக் குவிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள 12 ஏக்கர் வளவின் வாசலை ஆர்ப்பாட்டக்காரர்கள் மரக் கட்டைகளினாலும், பெரிய பாறைகளாலும் மூடியுள்ளனர். தற்போது இந்த வளவை பொலீஸார் காவல் புரிந்து வருகின்றனர்.

3 மாதங்களுக்கு முன் தமது நகருக்கு அருகே அரச காணியில் 3 நீண்ட அகழிகள் தோண்டப்பட்டன. இதில் கதிரியக்க தோரியம் ஹயிட்ரொக்சைட் கழிவுகள் சேகரித்து வைக்கப்படவிருந்தன.

இந்தக் கதிரியக்கப் பொருட்களில் இருந்து ஏற்படும் வெளியேற்றத்தால் இப் பகுதி மக்களின் சுகாதாரத்துக்குப் பங்கம் ஏற்படுமெனக் கருதியே இப் பிரதேசத்தில் கழிவுகள் குவிக்கப்படுவதை எதிர்த்து நாம் போராட்டம் நடத்தத் தீர்மா

வட ஒக்ஸ், மினெசோட்டா, ஜூன் 26

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிட நியமனம் கோரியுள்ள மொண்டேலுக்கு செனட்டர் எட்வர்ட் கென்னடி ஆதரவு வழங்க இருக்கிறார்.

1980 ஆம் ஆண்டு நடைபெற்ற பூர்வாங்க தேர்தலின் போது மொண்டேல் செனட்டர் எட்வர்ட் கென்னடியின் கடும் கண்டனத்துக்கு உள்ளாகி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜிம்மி கார்ட்டர் ஜனாதிபதியாக இருந்த பொழுது மொண்டேல் உப ஜனாதிபதியாக இருந்தார்.

1980 பூர்வாங்க தேர்தலின் போது ஜனநாயகக் கட்சி சார்பில் உப ஜனாதிபதி வேட்பாளர் நியமனம் கோரி இவர் போட்டியிட்டிருந்தார்.

சான்பிரான்சிஸ்கோவில் அடுத்த மாதம் ஜனநாயகக் கட்சியின் தேசிய மாநாடு நடைபெறுகிறது. இம் மாநாட்டில் ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் தெரிவு செய்யப்படுவார்.

(த)

ருந்து எண்ணெய்க் கப்பல்களைப் பாதுகாக்கும் வழிமுறைகள் பற்றி பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

வளைகுடாவில் பலம் வாய்ந்த சவூதி அரேபியாவின் விமானங்கள் மூலம் எண்ணெய்க் கப்பல்களுக்கு வான் பாதுகாப்பு பெறுவது பற்றி இப் பேச்சுவார்த்தைகளின் போது குறிப்பிடப்பட்டது.

நடுநிலைமை வகிக்கும் நாடுகளின் கப்பல்கள் மீது தாக்குதல் தொடர்ந்து மேற்கொள்ளப்படுமானால் ஈரான், ஈராக் பிரச்சினை மேலும் மோசமாகலாம் என வளைகுடா நாடுகள் கருத்துத் தெரிவிக்கின்றன.

(ந)

## மே. ஜெர்மனியில்

# ஒரு மாதத்தில் 2,63,100 கார்கள் விற்பனை

மேற்கு ஜெர்மனி, ஜூன் 25

கடந்த மாதம் மேற்கு ஜெர்மனியில் மொத்தம் 2,63,100 கார்கள் விற்பனை செய்யப்பட்டன. கடந்த வருடம் இந்த மாதம் விற்கப்பட்ட தொகையை விட 7.6 வீதம் இது அதிகமானதாகும்.

மேற்கு ஜெர்மனியின் வாகனப் பதிவுக் காரியாலயத்தினால் இந்த புள்ளி விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த மாதம் வெளிநாட்டு உற்பத்தியாளர்கள் தமது விற்பனையை 2.2 வீதத்திலிருந்து 28.9 வீதம் வரை அதிகரித்துள்ளனர்.

இந்த அதிகரிப்புக்கு மேற்கு ஜெர்மனியில் உலோகத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் ஓரளவுக்கு உதவியுள்ளது.

புதிய பதிவுகளில் வோல்க்ஸ்வோகன் முன்னணியில் உள்ளது. ஒரு மாதத்தில் 74,850 புதிய வோல்க்ஸ்வோகன் கார்கள் பதிவு செய்யப்பட்டன. அதையடுத்து ஓபல் (45,350). போர்ட் (39,530). டெய்ம்லர் பென்ஸ் (22,250) ஆகியன பதிவு செய்யப்பட்டன.

வெளிநாட்டு உற்பத்திகளில் பியட் 10,500 பதிவுகளினால் முன்னணி வகிக்கிறது. ஜப்பானிய கார்களில் மெஸ்டா முன்னணி வகிக்கிறது.

(ந)

# கல்வி முறை மாற்றங்களை எதிர்த்து பாரிஸில் மிகப் பெரிய ஊர்வலம்

## பத்து லட்சம் பேர் கலந்து கொண்டனர்

பாரிஸ், ஜூன் 25

பாரிஸில் நடைபெற்ற மிகப் பெரிய ஊர்வலம் எனக் கருதப்படும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றில் நேற்று ஆயிரக் கணக்கில் பெற்றோர், ஆசிரியர், எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். கல்வி முறையில் மாற்றங்கள் செய்யப்படுவதை எதிர்த்தே இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெற்றது.

தனிப்பட்ட ரோமன் கத்தோலிக்க பாடசாலைகள் [illegible] இந்த ஊர்வலத்தை ஏற்பாடு செய்தனர். ஊர்வலத்தில் பத்து லட்சம் பேர்வரை கலந்து கொண்டனர் என அவர்கள் கூறினர். ஆனால் உள்ளக அமைச்சு, ஊர்வலத்தில் 8½ லட்சம் பேர் கலந்து கொண்டதாகக் கூறியது.

அரசாங்க கல்வி முறையின் கீழ் தனிப்பட்ட பாடசாலைகளையும் கொண்டு வருவதற்கான சீர்திருத்தங்களை அரசாங்கம் மேற்கொண்டது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதே ஆர்ப்பாட்டத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது.

"சுதந்திர நாட்டில் சுதந்திரப் பாடசாலைகள்" என்று கோஷமிட்டவாறு ஊர்வலத்தினர் நான்கு வரிசைகளாக அணிவகுத்துச் சென்றனர்.

ஊர்வலத்தின் போது வன்செயல்கள் நடைபெறுவதைத் தடுக்க 4,000 கலகம் அடக்கும் பொலீஸ் படையினர் தயாராக இருந்தனர். அரசாங்கக் கட்டடங்களை மேலும் பல அதிகாரிகள் பாதுகாத்தனர்.

ஊர்வலத்தின் பின்னர் வேறு ஒரு மாவட்டத்தில் வீதிகளில் தடைகளைப் போட எத்தனித்த 100 இளைஞர்களைப் பொலீஸார் கைது செய்தனர்.

இவர்களில் 20 பேர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டதாகப் பொலீஸார் கூறினர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஐரோப்பிய நாடாளுமன்றத் தேர்தல்களில் படு தோல்வியுற்ற இடதுசாரிகளுக்கு எதிராக வலதுசாரி அரசியல்வாதிகளால் இந்த ஊர்வலம் நடத்தப்படுவதற்கான ஆலோசனை வழங்கப்பட்டிருக்கலாமென அரசாங்க மந்திரிகள் கூறினர்.

ஊர்வலத்தின் போது அரசாங்கத்துக்கு எதிரான கோஷங்கள் கிளப்பப்படுவதை தடுக்க ஊர்வல ஏற்பாட்டாளர்களே 25,000 அவதானிகளையும் ஏற்பாடு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

(ந)


## இந்திய உதவித் தூதுரகம்

## மறு வாழ்வுப் பகுதி

8/2 சங்கராஜ மாவத்தை

இலக்கம் 47 கண்டி.

### 1964/74–ம் ஆண்டு இலங்கை–இந்திய உடன்படிக்கையின் கீழ் இந்தியா திரும்புபவர்களுக்கான அறிவித்தல்

தமிழ்நாட்டில் ஆகஸ்ட் மாதம் 1984 ஆம் ஆண்டு தொடங்கவிருக்கும் (Regular g.t.g.) பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத பிரிவுகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கான 1964/74 ஆம் ஆண்டு இலங்கை — இந்திய உடன்படிக்கையின் கீழ் கடவுச் சீட்டு (Passport). பெற்றுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் கீழ்க்காணும் தகைமைகள் உடையவராய் இருத்தல் வேண்டும்.

1. 1964/74 ஆம் ஆண்டு இலங்கை — இந்திய உடன்படிக்கையின் கீழ் கடவுச் சீட்டு பெற்றிருத்தல் வேண்டும். (Passport)
2. க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையில் (G.C.E. (O/L) குறைந்தது 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் தமிழ், கணிதம்/எண் கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் கட்டாய சித்தி/சாதாரண சித்தி உடையவராய் இருத்தல் வேண்டும்.
3. வயது 01.08.1984 இல் 15 முதல் 25 வரை வயதுடையவராய் இருத்தல் வேண்டும்.
4. குடும்ப வருமானம் மாதம் 900/–க்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

பயிற்சிக்குத் தேர்ந்து எடுக்கப்பட்டு அனுப்பப்படுபவர்கள் பயிற்சி முடிந்த பின்னர் மீண்டும் இலங்கைக்குத் திரும்புவதாயின் தங்களது வாசகால அனுமதிச் சீட்டில் (Residence Permit) கால அவகாசம் இருந்தாலன்றி சாத்தியம் ஆகாது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இப் பயிற்சியில் சேர விரும்பும் மாணவர்கள் கண்டி இந்திய உதவி தூதரகத்துக்கு கீழ்க்காணும் ஆவணங்களுடன் 05. 07. 1984 அல்லது அதற்கு முன் நேரில் வந்து விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

1. கடவுச் சீட்டு (Passport).
2. கடவுச் சீட்டில் 1 ஆம் பக்கத்தில் இருந்து 5 ஆம் பக்கம் வரை போட்டோ கொப்பி 3 பிரதிகள்.
3. கல்விச் சான்றிதழின் மூலப் பிரதியுடன் 3 போட்டோ கொப்பி பிரதிகள்.
4. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் மூலப் பிரதி (Original) யுடன் 3 போட்டோ கொப்பி பிரதிகள். (3 copies).
5. குடும்பத்தில் உள்ள அனைவரதும் மொத்த மாத வருமானம் தொடர்பாக தோட்டத் துரையிடம் பெற்ற அத்தாட்சிப் பத்திரம், அதன் 3 போட்டோ கொப்பி பிரதிகள் (3 copies).

மு. கு: 05. 07. 1984 ஆம் திகதிக்குப் பின் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

## மக்களும் பதவியும்

### இஸ்ரவேல் செல்கிறார்



கொழும்பு, ஜூன் 26

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் அக்கரப்பத்தனை மாவட்டப் பிரதிநிதி திரு. எஸ். டேவிட் இஸ்ரவேல் செல்கிறார்.

இஸ்ரவேல் தலைநகரான டெல் அவிவ் நகரில் ஜூலை மாதம் 2 ஆம் திகதி முதல், 26 ஆம் திகதி வரை முதலாவது சர்வதேச தலைமைத்துவ தொழிற்சங்கப் பயிற்சி நிலையக் கருத்தரங்கு நடைபெறவிருக்கிறது.

அதில் கலந்து கொள்வதற்காகவே திரு. டேவிட் அங்கு செல்கிறார்.

டெல் அவிவ் நகரிலுள்ள சர்வதேச அபிவிருத்தி, கூட்டுறவுத் தொழிற் கல்வி நிலையத்தில் இக் கருத்தரங்கு நடைபெற இருக்கிறது.

ஆசிய நாடுகளிலிருந்து கலந்து கொள்ளும் ஒரே பிரதிநிதி திரு. டேவிட் ஆவார்.

ஆசிய நாடுகளைத் தவிர்ந்த, ஏனைய 30 நாட்டுப் பிரதிநிதிகள் இக் கருத்தரங்கில் பங்கு பற்றுகின்றனர்.

(எ-ங)

### கிராமோதய சபைத் தலைவர்கள்

ஒட்டமாவடி, ஜூன் 25

கோறளை வடக்கு வாகரை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கிராமோதய சபைத் தலைவர்கள் தெரிவு அவ்வப் பகுதி விசேட சேவை உத்தியோகத்தர்கள் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

பின் வருவோர் புதிய தலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

பால்சேனை: திரு. எஸ். நாகலிங்கம், வாகரை: திரு. சித்திரவேலு, மாங்கேணி: திரு. கே. இராசையா, கதிரவெளி: திரு. வி. இரத்தினம், காயான்கேணி: திரு. கே. திருநாவுக்கரசு.

(எ-236)

# அப்புத்தளையில் நீர்ப்பாசனத் திட்டம்

## ரூ. 1 கோடி செலவில்

அப்புத்தளை, ஜூன் 25

அப்புத்தளை தொகுதியில் நீர்ப்பாசனத் திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட இருக்கிறது.

இதற்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் 1 கோடியே 70 லட்சம் ரூபா செலவிடப்படும்.

மேற்படி நீர்ப்பாசனத் திட்டம், தற்போது அப்புத்தளை தேர்தல் தொகுதியில், நீர் வசதி அறவே இல்லாத பகுதிகளான கிரவனகம, மஸ்பென்ன, நிக்கபொத்த ஆகிய இடங்களில் செயற்படுத்தப்படும் என அறிய வருகிறது.

அப்புத்தளைத் தொகுதியில் மேற்கொள்ளப்பட இருக்கும் பிரஸ்தாப நீர்ப்பாசன வேலைத் திட்டங்களை உடனடியாக ஆரம்பிக்குமாறு, அப்புத்தளை தொகுதி எம். பியும், சுதேச வைத்தியத் துறை அமைச்சருமான திரு. டபிள்யூ ஜே. எம். லொக்குபண்டார, நீர்ப்பாசன சபை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

இந் நீர்ப்பாசனத் திட்டத்தின் மூலம் அப்புத்தளை தேர்தல் தொகுதியைச் சேர்ந்த மக்கள் பெரும் நன்மை அடைவர் என நம்பிக்கை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(எ-100)

## "சம்பள உயர்வு போராட்டம் வெற்றிபெற ஐக்கியமே அவசியம்"

மஸ்கெலியா, ஜூன் 25

"சுயநல நோக்கங்களைக் கொண்டவர்கள் திடீர், திடீரென குட்டிச் சங்கங்களை அமைத்துச் செயல்படுவதால் நம்மவர்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்த முடியாதிருக்கிறது. நமது சம்பள உயர்வுப் போராட்டத்தை வென்றெடுக்கப் பலர் உதவுகிறார்கள். இச்சந்தர்ப்பத்தில் நாம் ஐக்கியத்துடன் செயல்படுவது அவசியம்.

இவ்வாறு, ஐக்கிய இலங்கை சலவை — சலூன் தொழிலாளர் யூனியனின் நிதிச் செயலாளர் திரு. எஸ். ஜெகதீஸ்வரன் கூறினார்.

நோர்வூட் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற, யூனியன் நிர்வாகச் சபைக் கூட்டத்தில் பேசும்போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இக் கூட்டம் யூனியன் தலைவர் திரு. வீ. முத்தையா தலைமையில் நடைபெற்றது.

மாத்தளை, எட்டியாந்தோட்டை, மடுல்கல, றங்கல, கொழும்பு, மத்துகம, ஹட்டன், ஆகிய பகுதிகளில் இருந்து பலர் கூட்டத்தில் பங்கு பற்றினர்.

ஜெகதீஸ்வரன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

சுய நல நோக்கம் கொண்ட சிலரால் திடீர், திடீரென உருவாக்கப்படும் போலிச் சங்கங்களால் நமது முயற்சிகள் தடைப்படுகின்றன.

"எம்மவர்களிடையே ஒற்றுமையைத் தோற்றுவிக்க வேண்டும் என பொதுச் செயலாளர் திரு. பீ. எஸ். மணியம் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று நல்ல பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

இதன் பயனாக தோட்ட சலவை — சலூன் சேவையாளர் சங்கம், மாத்தளை சலூன் — சலவையாளர் சங்கம், ஊவா மருத்துவர் சங்கம் ஆகியன இப்போது எம்மோடு இணைந்து செயல்படுகின்றன.

நமது சங்கம் பத்து ரூபா சம்பள உயர்வு கோரிப் போராடி வருகிறது.

எமது பத்து ரூபா சம்பள உயர்வுக் கோரிக்கை நியாயமானதென்று எமக்கு ஒத்துழைப்பு நல்கவும் சிலர் முன்வந்துள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

(எ-191)

## மட்டக்களப்பில் கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கு கட்டடங்கள்

### புதிதாக நிர்மாணிக்க ஏற்பாடு

வவுணதீவு, ஜூன் 25

மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வருடம் எம். பிக்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியின் கீழ் 7 கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு கட்டட வசதிகள் செய்து கொடுக்கப்படவிருக்கின்றன.

இத்தகவலை மட்டக்களப்பு மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜனாப் ஏ. எல். எம். முஜீம் தினபதிக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:—

பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரையினால் ஒதுக்கப்பட்ட நிதியின் கீழ் –

மரப்பாலம், உன்னிச்சை, 6ஆம் மைல், கொத்தியாபுலை, கரடியனாறு, திருப்பெருந்துறை ஆகிய கிராமங்களிலும்,

மாவட்ட அமைச்சின் நிதியின் கீழ் பட்டிருப்புத் தொகுதியில் –

தாளையடித்தெரு, கொக்கட்டிச்சோலை ஆகிய இடங்களில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் அமையவிருக்கின்றன.

இவை ஒவ்வொன்றும் 80 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவிருக்கின்றன.

(எ-318)



அண்மையில் தலைமன்னாரில் நடைபெற்ற பனம் பொருள் விழாவில் பனம் பொருள் விற்பனையை தலைமன்னார் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. கே. அரசரத்தினம் ஆரம்பித்து வைப்பதை முதலாவது படத்திலும், காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த பொருள்களை மக்கள் பார்வையிடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். [படம்: எம். எம். ஹலீம்]

(எ-286)

## சலவை, சலூன் தொழிலாளர் இன்னும் முன்னேறவில்லை

### தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் பெருமாள் கவலை

அட்டன், ஜூன் 25

சலவை, சலூன் தொழிலாளர்களின் வாழ்வில் இன்றுவரை எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. சமூகத்தில் அவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே வாழ்கின்றனர்.

இவ்வாறு கூறினார் இலங்கை சலவை, சலூன் தொழிலாளர் காங்கிரஸ் தலை...

கடந்த முப்பத்திரண்டு ஆண்டுகளாக இலங்கை சலவை, சலூன் தொழிலாளர் யூனியன் என்ற பெயரில் இயங்கி வந்த நமது சங்கம் தற்போது "இலங்கை சலவை, சலூன் தொழிலாளர் காங்கிரஸ்" என்று பெயர் மாற்றம் பெற்றுள்ளது.

புதிய பெயருடன் தோன்றி... பட்டு வருகிறோம்.

சலவை, சலூன் தொழிலாளர்களின் அடிப்படை கோரிக்கைகளை வென்றெடுக்க இ. தொ. காவின் துணையோடு தொடர்ந்து பாடுபடுவோம்.

இப்படி திரு. ஆர். பெருமாள் கூறினார்.

(எ-96)

## கிராமங்கள் அபிவிருத்தியடைய வழி

### உ. அ. அதிபர் விளக்கம்

பேசாலை, ஜூன் 25

எமது நாட்டில் 70 வீத ... தொழில்களைச் செய்வது சிரமம்.

### எச்சரிக்கை

தலைமன்னார் பகுதி கடலோரங்களில் கரையொதுங்கிய 8 வீடியோ, டெக்குகளைக் கண்டெடுத்து அவற்றை வேறு சிலருக்கு விற்பனை செய்த மீனவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

தலைமன்னார் துறை சுங்க அதிகாரிகளினால் மேற்படி மீனவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டனர். வீடியோ டெக்குகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

(எ-251)

இராசையா. கசிரவெளி: திரு. வி. திருவைபரத்தினம். காயான் தேணி: திரு. கே. திருநாவுக் கரசு. (எ-236)

## நிர்வாகிகள்

மாங்குளம், ஜூன் 25

மாங்குளம் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்க நடப்பு வருட உத்தியோகத்தர்கள்:

தலைவர்: திரு. க. நாக சுந்தரம்.

உப தலைவர்கள்: திரு. தி. நடராசா, திரு. எம். அருணா சலம்.

செயலாளர்: திரு. கு. சச்சி தானந்தமூர்த்தி.

உப செயலாளர்: திரு. பால சுப்பிரமணியம்.

பொருளாளர்: திரு. வை. ஜெயபாலகிருஷ்ணன்.

மற்றும் ஏழுபேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது. (எ-179)

★

நிந்தவூர், ஜூன் 25

கல்முனைத் தொகுதியைச் சேர்ந்த நற்பிட்டி முனை முஸ்லிம் பிரிவு கிராம அபிவிருத்திச் சங்க புதிய நிர்வாகிகள் விலரம் வருமாறு:

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள் ஜனாப் ஏ.ஆர். மன்சூர், ஜனாப் ஏ.ஏ. கபூர், ஜனாப் எல். உதுமாலெவ்வை

தலைவர்: ஜனாப் ஏ. எல் உமறுகத்தா. உபதலைவர்கள்: ஜனாப் எம். சீ. அமீர், ஜனாப் எம். கையும், செயலாளர்: ஜனாப் எஸ். அசிசுல்லா: உப செயலாளர்: ஜனாப் ஏ. எல். பழீல். பொருளாளர்: ஜனாப் கே. றசீக்.

மேலும் நிர்வாக சபை உறுப்பினர்களாக ஜனாப்கள் வீ. சலீம் கான். ஏ. எல். ஹிதாயத்துல்லா, எஸ். எம். ஏ.ஜஃபர், வீ. இப்ராகீம். எம். இஸ்ஸதீன். எம்.ஏ. இல்யாஸ். எம். ஹசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(எ-217)

★

ஹைகம் பண்ணகணக்க ஸ்ரீ முத்துமாரியம்மன் சேவைக்கான இந்து மன்றத்தின் நடப்பு வருட நிர்வாகிகள் விபரம்:

தலைவர்: எம். எஸ். தங்க வேல் உபதலைவர்: செல்வ ரட்ணம். செயலாளர்: வி. மூர்த்தி. உப செயலாளர்: எஸ். மாணிக்கம், பொருளாளர்: எஸ் வரதராஜா. உப பொருளாளர்: பீ. லோகநாதன், கணக்கியல் காப்பாளர்கள்: பீ. லோகநாதன், அ. ராஜரட்ணம். (எ)

## உ. அ. அதிபர் விளக்கம்

பேசாலை, ஜூன் 25

எமது நாட்டில் 70 வீதமான மக்கள் கிராமப்புறங்களிலேயே வாழ்ந்து வருகின்றனர். ஆதலால் அங்கு தான் முதலில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அடம்பன் உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிராமோதய சபைத் தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகியோருக்கான இரண்டு நாள் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய மன்னார் திட்டமிடல் பணிப்பாளர் திரு. எஸ். ரங்கராஜா தெரிவித்தார்.

அடம்பன் உப அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் தொடர்ந்து உரையாற்றிய மன்னார் திட்டமிடல் பணிப்பாளர் தமது உரையின் போது:—

மன்னார் மாவட்ட ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டம், மன்னார் மாவட்டத்தின் வரலாற்றை முன்னெடுத்துச் செல்லும் ஒரு திட்டமாகும்.

இதனால் மன்னார் மாவட்ட மக்கள் பயன் அடையப் போகிறார்கள். ஆதலால் மக்கள் தமது பங்களிப்பை வழங்க வேண்டும்.

இம்மாவட்டத்தில் மரம் வெட்டுவதாலும், பாதுகாத்து வளர்க்காததாலும் இன்னும் சில வருடங்களில் எமக்குத் தேவையான மரங்களை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

இங்கு விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு ஆகிய தொழில்களைத் தவிர வேறு தொழில்களைச் செய்வது சிரமம்.

அடம்பன் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பனை அபிவிருத்தியையும், பால் உற்பத்தியையும் அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

(ல- 251)

## மூன்று தமிழ் பாடசாலைகளுக்கு மூடுவிழா

வெலிகாமம், ஜூன் 23

கடந்த ஜூலை வன்செயல்களையடுத்து இடம் பெயர்ந்த ஆசிரியர்கள் பலர் இதுவரை சேவைக்குத் திரும்பவில்லை. இதனால் மாத்தறை மாவட்டத்தில் உள்ள மூன்று தமிழ்த் தோட்டப் பாடசாலைகள் மூடப்பட்டிருக்கின்றன.

இதன் காரணமாக இங்கு கல்வி கற்கும் சுமார் 300 மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

மொறவக்க கல்விப் பகுதியில் உள்ள பெவர்லி, ஹேன் பார்ட், பனில்கந்த ஆகிய மூன்று தோட்டப் பாடசாலைகளுமே ஆசிரியர்கள் இன்றி இவ்வாறு மூடப்பட்டிருக்கின்றன.

...வும் பின்தங்கிய நிலையிலேயே வாழ்கின்றனர்.

இவ்வாறு கூறினார் இலங்கை சலவை, சலூன் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. ஆர். பெருமாள்.

மேற்படி சங்கத்தின் பத்தனை மாவட்ட பணிமனையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு அவர் பேசினார். மாவட்டத் தலைவர் திரு. எஸ். காளிமுத்து தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

திரு. பெருமாள் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

...இலங்கை சலவை, சலூன் தொழிலாளர் காங்கிரஸ்" என்று பெயர் மாற்றம் பெற்றுள்ளது.

புதிய பெயருடன் தோன்றியுள்ள இச்சங்கம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஒரு அங்கமாக இருந்து செயல்படும்.


சலவை, சலூன் தொழிலாளர்களின் வாழ்வில் இதுநாள் வரை எவ்விதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை. சமூகத்தில் அவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே வாழ்கின்றனர்.

இந்த இழிநிலையை மாற்றி அமைக்கவும், சலவை, சலூன் தொழிலாளர் வாழ்வில் நல்ல மாற்றம் காணவும் நாம் திட்டமிட்டு செயலாற்ற வேண்டியிருக்கிறது.

நாம் தனித்து நின்று செயலாற்றுவதால், எவ்வித பயனும் இல்லை. நாம் ஏனைய சக்திகளோடு இணைந்து நின்று செயலாற்றுவதன் மூலமே எமது உரிமைகளை வென்றெடுக்க முடியும்.

இந்த எண்ணத்தில் தான் நாம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் இணைந்து அதில் ஒரு அங்கமாக நின்று செயல்ந்து பாடுபடுவோம்.

இப்படி திரு. ஆர். பெருமாள் கூறினார். (எ-96)



மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி ப.நோ. கூ. சமாஜத்தின் மாதிரிக் கடைதிறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட அரசாங்க அதிபர் திரு. எம். அந்தோனிமுத்து உரையாற்றுவதைப் படத்தில் காண்க. அருகில் கூட்டுறவு ஆணையாளர் திரு. ஏ. ரி. ஒக்கஸ், உதவி அரசாங்க அதிபர் ஜனாப் எம். ஐ. எம். எம். ரபீக் ஆகியோர் காணப்படுகின்றனர். (எ-318)

[படம்: இரா உதயகுமார்.]

## தும்பு ஆலை ஊழியருக்கு ஏற்படும் விபத்துக்கள்

### நலவுரிமைப் பிரிவு கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜூன் 26

தும்பு ஆலைகளில் தொழில் செய்யும் ஊழியர்களில் 80 சத வீதமானோர் தங்கள் தொழிலகங்களிலேயே பலத்த விபத்துக்குள்ளாகின்றனர்.

தொழில் திணைக்களத்தின் ஊழியர் நலவுரிமைப் பிரிவு மேற்கொண்ட மதிப்பீடு ஒன்றிலிருந்து இது தெரிய வருகிறது.

நாட்டின் தெற்குக் கரையோரப் பகுதிகளில் அமைந்துள்ள 35 கயிறு ஆலைகளிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலிருந்தே இது கண்டறியப்பட்டது.

கைத்தொழில் பிரிவில் ஈடுபடும் ஊழியர்களின் இடருகள். பாலானோர் தமது வலது கையில் ஓரிரு விரல்களை இழக்க நேரிடுகிறதாம். சில சமயங்களில் முழுக் கையையும் எடுக்க வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது.

தும்பை பதப்படுத்துவதற்கு உபயோகிக்கும் இயந்திரங்களின் மூலமே இந்த விபத்துக்கள் நேரிடுகின்றன என்றும் மேற்படி ஆய்வுப் பிரிவு சுட்டிக் காட்டியிருக்கிறது.

எனவே, ஊழியர்களுக்கு இத்தகைய பாதிப்புக்களை ஏற்படுத்தும் நிலைமைகள் தொடர்பாக. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தொழில் திணைக்களம் தெளிவுபடுத்தி இருக்கிறது.

(ஏ-1)

## ஆயுதங்களுடன் மூவர் கைது

கொழும்பு, ஜூன் 26

கைத்துப்பாக்கி தோட்டாக்கள், கிரிஸ் கத்திகள் ஆகியவற்றுடன கார் ஒன்றில் காணப்பட்ட மூன்று சந்தேக நபர்கள் கொழும்பு பஞ்சிகாவத்தையில் வைத்து பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

பிரஸ்தாப கார் அநுராதபுரத்தில் இருந்து வாடகைக்கு அமர்த்தப்பட்டது என்றும் காரின் சாரதி புத்தளம் மீஓயா பாலத்திற்கு அருகில் மரம் ஒன்றுடன் சேர்த்துக் கட்டி வைக்கப்பட்டு, கார் கடத்தப்பட்டிருக்கிறது என்றும் பொலீஸ் விசாரணைகளில் இருந்து தெரியவருகிறது.

பிரஸ்தாப காரை விற்பனை செய்வதற்காகவே அதனைச் சந்தேகநபர்கள் கடத்தியிருக்க வேண்டும் என்று தெரிய வருகிறது.

பஞ்சிகாவத்தைக்கு அருகில் இந்த கார் பழுதடைந்தது. காரை மூவரும் திருத்திக் கொண்டிருந்தனர்.

இந்தச் சமயம் ஹல்ஸ்டொப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. பீ.டி. அத்துகோரளை தலைமையிலான பொலீஸார் ரோந்து சென்றனர்.

சந்தேகமுற்ற பொலீஸார் சோதனை நடத்தினார்கள். அப்போதே கார் கடத்தல் நாடகம் அம்பலத்திற்கு வந்தது.

ஹல்ஸ்டொப் பொலீஸார் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர்.

## ஆயுள்வேதம் பற்றிப் போதனை

குருநாகல், ஜூன் 25

குருநாகல் மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு ஆயுள்வேத வைத்தியத்தின் முக்கியத்துவம் பற்றிப் போதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

குருநாகல் மாவட்ட அமைச்சர் திரு. காமினி ஜெயவிக்கிரம பெரேரா நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

முதலாவதாக இந்த பயிற்சி வகுப்புக்கு குருநாகல் அதுகள் புரத்தில் இருந்து 100 மாணவர்கள் தெரிவு செய்யப் படுவர்.

பிறகு இந்தத்திட்டம் சகல பாடசாலைகளுக்கும் அறிமுகப் படுத்தப்படும். (ஏ-1)

கள் ஏச்சாக்கை செய்யப்பட்டனர். வீடியோ டெக்குகளும் பறிமுதல் செய்யப்பட்டன. (எ-251)

## பொலீஸ் உடையில் வந்த பெண்மணி

### நகை திருடியதாகக் கைது

கம்பளை, ஜூன் 25

பொலீஸ் உடை அணிந்து ஒரு வீட்டிற்கு வந்த பெண்ணொருவர் அவ்வீட்டில் ஒருநாள் தங்கியிருந்து விட்டு சுமார் 8 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளைத் திருடிக்கொண்டு தலைமறைவாகி விட்டாராம்.

பிரஸ்தாப சம்பவம் கம்பளை பொலீஸ் பகுதியிலுள்ள போத்தாப் பிட்டிய என்ற இடத்தில் நடைபெற்றது.

இது பற்றிக் கூறப்படுவதாவது:—

சந்தேக நபர் பிரஸ்தாப பெண் முன்னர் ரீசர்வ் பொலீஸ் உத்தியோகத்தராகக் கடமையாற்றியுள்ளார். இவர் பதவியிலிருந்து விலகிய பின்னர் தமது உத்தியோகபூர்வ உடைகளை திருப்பிப் பொலீஸ் திணைக்களத்துக்கு ஒப்படைக்காமல் தம்முடன் வைத்திருந்தாராம்.

அந்த உடையில் அவருக்கு அறிமுகமான ஒரு வீட்டிற்கு வந்து ஒருநாள் இரவு தங்கியிருந்து, மறுநாள் கொழும்புக்கு போவதாகக் கூறி இவர் கிளம்பிச் சென்றுள்ளார். இவர் சென்ற பிறகு வீட்டில் இருந்த தங்க நகைகளைக் காணாது கம்பளை பொலீஸில் புகார் செய்யப்பட்டது.

பொலீஸார் விசாரணைகளை நடத்தி சந்தேகநபரை கொம்பனித் தெருவில் ஒரு வீட்டில் வைத்துக் கைது செய்தனர். களவாடப்பட்ட நகைகளில் ஒரு பகுதியையும் மீட்டனர்.

பிரஸ்தாப பெண் கம்பளை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது, மாவட்ட நீதிபதி திரு. காமினி அபேரட்ன சந்தேக நபரை ரூ. 5 ஆயிரம் பிணையில் செல்ல அனுமதித்தார்.

வழக்கு விசாரணையை இம் மாதம் 28 ஆம் திகதிவரை ஒத்திவைத்தார்.

(எ-83)

## மண்சரிவு அபாயம் குறித்து மக்கள் பீதி

நாவலப்பிட்டி, ஜூன் 25

தொரணகல, உடஹேன்கந்த மலையில் மண்சரிவுகள் ஏற்படலாம் என இப்பகுதி மக்கள் அஞ்சுகின்றனர்.

மேற்படி மலையின் ஒரு பகுதியான பருவமலையில் மண் சரிவு ஏற்பட்டால் சுமார் (30) முப்பது ஹெக்டர் நிலம் பாதிக்கப்படலாம் என அச்சம் தெரிவிக்கப் படுகின்றது.

இதனால் இம் மலையடிவாரத்தில் வாழும் குடும்பங்கள் பெரும் பீதியடைந்து உள்ளன.

இம்மலையின் ஒரு பகுதி 1967ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பெயர்ந்து விழுந்தது. அப்போது ஒரே குடும்பத்தைச் [illegible]

## வானொலி

26 — 6 — 1984

காலை:

5.30 நாதாஞ்சலி
5.35 திருமுறைப் பாடல்கள்
6.00 சைவ நற்சிந்தனை
6.05 இஸ்லாமிய நற்சிந்தனை
6.10 பாமாலை
6.30 செய்திகள்
6.50 மெல்லிசைப் பாடல்கள்
7.00 வயலின் — லால்குடி ஜீ. ஜெயராமன், ஸ்ரீமதி
7.30 மாகாணச் செய்திகள்
7.35 இசையமுதம்
8.05 வாத்திய மஞ்சரி
8.15 முஸ்லிம் நிகழ்ச்சி

மாலை:

6.00 செய்திகள்
6.20 இப்தார் நிகழ்ச்சி
6.35 கோபுர தரிசனம் — கிளிநொச்சி உருத்திர புரம் சிவன்கோவில்

இரவு:

7.05 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
8.00 உலகச் செய்திகள்
8.10 களத்துமேடு
8.25 முக்தார் வீட்டில்
8.40 நாட்டுப் பாடல்
8.45 கத்தோலிக்க சிறுவர் நிகழ்ச்சி
9.00 செய்திகள்
9.30 பாட்டு — டி. கே. ஜெயராமன்

## டெலிவிஷன்

26 — 6 — 1984

### ரூபவாஹினி

5.30 ஹேட்ஸ் அன்ட் டெய்ல்ஸ்
6.00 முதுஹர
6.25 கால் நடைச் செல்வம்
6.55 செய்திகள் — தமிழ்
7.15 பியூசர் அட்ரக்சன்ஸ்
7.45 இசை நிகழ்ச்சி
8.15 செய்திகள் — சிங்களம்
8.35 "தெரிவு" — விவரணச் சித்திரம்.
9.00 டிபரன்ட் ஸ்ட்ரோக்ஸ்
9.30 செய்திகள் — ஆங்கிலம்
9.50 இசை நிகழ்ச்சி — "ஆன் மறே"
10.30 உலகச் செய்திகள்
10.35 இசை நிகழ்ச்சி — "ஆன் மறே" (தொடர்ச்சி).

### ஐ. டி. என்.

6.31 "பிரான்ஸ் டுடே"
7.00 பேன் கிளப்
7.30 பிறெண்டன் சேஸ்
8.00 டொக்டர் ஹூ
8.30 கலாசார விழா — கியூபா 83.
9.30 செய்திகள் — ஆங்கிலம்
9.45 ஆங்கிலத் திரைப்படம்

# கம் உதாவ 265 மைல் சைக்கிள் ஓட்டம்

## 229 வீரர்கள் கலந்துகொள்கின்றனர்

கொழும்பு, ஜூன் 26

இம்முறை நடைபெற உள்ள "கம் உதாவ 84" 265 மைல் சைக்கிளோட்டப் போட்டியில் 229 பேர் பங்குபற்றுவர்.

பிரபல சைக்கிளோட்ட வீரர் ஏ. எம். சுமணவீர தவிர்ந்த ஏனைய முன்னணி சைக்கிளோட்ட வீரர்கள் பலர் இப்போட்டியில் கலந்து கொள்ள தமது விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர்.

ஆண்களுக்கான 265 சைக்கிளோட்டப் போட்டியை அரச பொறியியற் கூட்டுத்தாபனம் ஏற்பாடு செய்கிறது.

இரு கட்டங்களாக நடைபெறும் இப்போட்டியின் முதற் கட்டம் ஜூன் மாதம் 30 ஆம் திகதி காலை 7 மணிக்கு அநுராதபுரத்தில் கம் உதாவ பொருட் காட்சியின் பிரதான பந்தல் முன்பாக ஆரம்பமாகும்.

இந்நிகழ்ச்சியின் போது பிரதம அதிதியாக அநுராதபுரத்தின் மாவட்ட அமைச்சர் திரு. சந்திரா பெரேரா கலந்து கொள்வார்.

போட்டியின் முதற் கட்டம் அன்றைய தினம் பகல் 2 மணியளவில் கொழும்பு, டபிள்யூ. ஏ. டி. ராமநாயக்க வீதியிலுள்ள அரச பொறியியல் கூட்டுத்தாபனம் முன்பாக முடிவடையும்.

போட்டியின் இரண்டாம் கட்டம் அடுத்த நாள் ஜூலை 1 ஆம் திகதி காலை 7 மணிக்கு அரச பொறியியல் கூட்டுத்தாபனம் முன்பாக ஆரம்பமாகும்.

அதே தினம் மாலை 3 மணியளவில் அநுராதபுரத்தில் கம் உதாவ பொருட்காட்சி மைதானத்தில் போட்டி முடிவடையும். போட்டியின் முழுத் தூரம் 265 மைல்களாகும்.

சென். ஜோன்ஸ் முதல் உதவி இயக்கத்தினர் போட்டியின் போது முதலுதவிச் சிகிச்சைகளை தேவையேற்படும் போது வழங்குவதற்கு ஆயத்தமாக இருப்பார்கள்.

அன்றைய மாலை 6 மணிக்கு அநுராதபுரத்தில் கம் உதாவ பொருட்காட்சி வைபவத்தின் போது வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகள் வழங்கப்படும்.

ஆண்களுக்கான போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகளை திருமதி ஹேமா பிரேமதாசாவும், பெண்களின் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகளை திருமதி ஈ. எல். பி. ஹுருள்ளேயும் வழங்கவுள்ளனர்.

ஜூலை 1 ஆம் திகதி காலை 8 மணிக்கு அநுராதபுரத்தின் கம் உதாவ பொருட்காட்சி மைதானத்தில் ஆரம்பமாகும். பெண்கள் சைக்கிளோட்டப் போட்டியில் 32 வீராங்கனைகள் பங்குபற்றுவர்.

இப்போட்டியில் வட மத்திய மாகாணத்தைச் சேர்ந்த வீராங்கனைகள் மாத்திரமே பங்குபற்ற முடியும். (ந)

## போட்டிகள்

சித்தன்கேணி, ஜூன் 25

கீரிமலை சிவநெறிக் கழகம் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே எதிர்வரும் ஜூலை மாதத்தில் பல போட்டிகளை நடத்தவிருக்கிறது.

நீதிச் செய்யுள் மனனப் போட்டி, புராண படனப் போட்டி, கதாப்பிரசங்கப் போட்டி ஆகியன இதில் அடங்கும்.

(ல— 283)

# தேசிய சிரேஷ்ட மாணவர் நீச்சல் போட்டி நாளை

கொழும்பு, ஜூன் 26

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையே சிரேஷ்ட பிரிவினருக்கான தேசிய நீச்சல் போட்டிகள் நாளை 27 ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை சென். ஜோசப்ஸ் கல்லூரி தடாகத்தில் நடைபெறும்.

27 பாடசாலைகளைச் சேர்ந்த 270 வீர வீராங்கனைகள் இப்போட்டியில் கலந்து கொள்ள விண்ணப்பித்துள்ளனர்.

17 ஆண்கள் பாடசாலைகளிலிருந்து 200 வீரர்களும், 10 பெண்கள் பாடசாலைகளைச் சேர்ந்த 70 வீராங்கனைகளும் போட்டியில் ஈடுபடுவர்.

இப்போட்டியை பாடசாலைகளின் நீச்சல் விளையாட்டு ஒன்றியம் நடத்துகிறது.

15 17, 19 வயதுக்குட்பட்ட பிரிவுகளில் போட்டிகள் நடைபெறும்.

இம்முறை போட்டிகளில் வெளியூர் பாடசாலைகள் அதிக அளவில் பங்குபற்றுவது குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும்.

பாணந்துறைப் பகுதியிலிருந்து 3 பாடசாலைகளும், களுத்துறைப் பகுதியிலிருந்து 3 பாடசாலைகளும், ரிச்மண்ட் (காலி), தர்மாசோக (அம்பலாங்கொடை), ஸ்ரீ தேவானந்த (அம்பலாங்கொடை), சென். தோமஸ் (குருத்தலாவை), ஆகிய வெளியூர்ப் பாடசாலைகளில் முக்கிய இடம்பெறுகின்றன.

கடந்த வருடம் இப்போட்டியில் முதலிடம் பெற்ற றோயல் அணி இம்முறை வெற்றியைப் பெறுவது எளிதாக இருக்காது என நம்பப்படுகிறது. (ந)

# படகோட்டத்தில் சுவீடிஷ் வீரர் முதலிடம்

சீனக்குடா, ஜூன் 25

நிலாவெளிக் கடற்கரையில் நடைபெற்ற சர்வதேச படகோட்டப் போட்டிகள், நீர் சறுக்கல் போட்டிகளில் சுவீடன் நாட்டு விளையாட்டு வீரர் ஜெகன்ஸலன் முதலாவது இடத்தைப் பெற்று சாம்பியன் ஆக தெரிவு செய்யப்பட்டார்.

இப்போட்டிகளில் கலந்து கொண்ட இலங்கை விளையாட்டு வீரரான வென்னப்புவையைச் சேர்ந்த அன்ரனி பெரேரா சிறந்த தகைமையைப் பெற்ற போட்டியாளராகத் தெரிவானார்.

ஏயர் லங்கா நிறுவனம், சர்வதேச நீர் விளையாட்டு ஒன்றியம், இலங்கை உல்லாசப் பயணச் சபை, ஆகியவை இணைந்து இப்போட்டியை நடத்தின.

இப்போட்டிகளில் இலங்கை, சுவீடன், ஜெர்மனி, இத்தாலி, சிங்கப்பூர், சுவிற்சர்லாந்து, ஒல்லாந்து ஆகிய நாடுகளைச்

நீர் சறுக்கல் போட்டி, விமானதப் படகு ஓட்டப் போட்டி, மரதன் படகு ஓட்டப் போட்டி ஆகியவற்றில் முதலிடத்தைப் பெற்று சாம்பியன் கிண்ணத்தை சுவீடன் வீரர் ஜெகன்ஸலன் சுவீகரித்தார்.

இப்போட்டிகளை அடுத்து நிலாவெளி "மூன்லைட் பீச் ஹோட்டலில்" நடைபெற்ற வைபவத்தில் விளையாட்டுத் துறை நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் திரு. வின்சென்ட் பெரேரா கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கான வெற்றி கிண்ணங்களையும், பணப் பரிசுகளையும் வழங்கினார்.

சாம்பியனாகத் தெரிவு செய்யப் பெற்ற சுவீடன் நாட்டு வீரர் ஜெகன்ஸலனுக்கு வெற்றிக் கிண்ணமும், 500 அமெரிக்க டாலர்களும் வழங்கப்பட்டன.

சிறந்த தகைமை பெற்ற விளையாட்டு வீரராகத் தெரிவு செய்யப் பெற்ற இலங்கை வென்னப்புவையை சேர்ந்த அன்ரனி பெரேராவுக்கு 50 ஆயிரம் ரூபா

## இன்றைய திரைகளில்


5—வதுவாரம்

சமந்தா
10.00, 2.00, 6.00, 9.30

வின்ஸர்
(யாழ். நகர்)
10.30, 2.30, 6.00, 9.30

சரஸ்வதி
(திருமலை)
6—00 9—30

மக்கள் திலகம்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
நடித்த

ஒளி விளக்கு

(கலர்)
(புத்தம் புதிய கொப்பி)


## நன்கொடை


ஓட்டமாவடி, ஜூன் 25

அகதிகள் புனர்வாழ்வு நிதிக்காக வாழைச்சேனை தேசிய கடதாசி ஆலை ஊழியர்கள் 6 ஆயிரத்து 567 ரூபா 53 சதம் நன்கொடை வழங்கியிருக்கிறார்கள்.

இந்த நிதி, கோறளைப்பற்று — வாழைச்சேனை அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கண்ணன் கிராமத்திற்கு வழங்கப்படும். இது ஒரு அகதிகள் குடியேற்றக் கிராமமாகும்.

இங்கு குடிசைக் கைத்தொழில் நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்

## விளையாட்டுப் பகுதி



## இல்லவிளையாட்டு போட்டி

8.30 கலாசார விழா — கியூபா 83.
9.30 செய்திகள் — ஆங்கிலம்
9.45 ஆங்கிலத் திரைப்படம் "சட்டர்டே, சன்டே, மன்டே".

## தராவிஹ் தொழுகை

பண்டாரவளை, ஜூன் 24

புனித ரம்ழான் மாத இரவு தராவீஹ் தொழுகை அஹறாகொல்லை அல்-பத்திரியா ஜும்ஆப் பள்ளி வாசல், தியத்தலாவை தக்கியா, கிரிந்திஎல்ல தக்கியா ஆகிய இடங்களிலும் 9ஆம் நம்பர், தொடங்கொல்ல ஆகிய இடங்களில் தனிப்பட்ட இரு வீடுகளிலும் நடத்தப்பட்டு வருகிறது.

ஜூலை முதலாந் திகதி வரை இத்தொழுகை நடத்தப்படும்.

மேற் குறிப்பிட்ட ஐந்து இடங்களுக்கும் அஹறாகொல்லை அல் பத்திரியா ஜும்ஆப் பள்ளி வாசலைச் சேர்ந்த ஜமாத்தார்களே செல்கிறார்கள். (ல—39)

## சந்தேக நபர் விளக்கமறியலில்

கொழும்பு, ஜூன் 26

கொழும்பு நாரஹேன்பிடிய வாகனப் போக்குவரத்து நீதிமன்ற நீதிபதி பீ. பெரேராவைத் தாக்கி அவர் பயணம் செய்த காருக்குத் தீவைத்துச் சேதப்படுத்தினர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட நபரை, அடுத்த மாதம் 4 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி, கொழும்பு, பதில் நீதவான் திருமதி மானல் யாபா அபேவர்த்தன உத்தரவிட்டார்.

கறுவாக்காடு பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. மஹேடேவிட் மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சந்தேக நபர் தொடர்பாக ஜூலை 4 ஆம் திகதி அடையாள அணிவகுப்பு ஒன்றை நடத்த வேண்டும் என்றும் பதில் நீதவான் உத்தரவிட்டார்.

மேற்படி நீதிபதியின், காரில் பிரயாணம் செய்த பொலீஸ் அதிகாரி ஜனப் நூர்தீனையும் தாக்கியதாக மேற்படி சந்தேக நபர் மீது குற்றஞ் சுமத்தப்பட்டிருக்கிறது. (ஊ—33)



புத்தளம் சென். அன்ரூஸ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியின் போது, புத்தளம் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதி திட்டமிடல் அமைச்சருமான அல்ஹாஜ் எம். எச். எம். நைனா மரிக்கார் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

அவர் மாணவிகளின் அணி வகுப்பு நிகழ்ச்சியைப் பார்வையிடுவதைப் படத்தில் காண்க. (ந—241)

[படம்: எம். ஏ. அஷ்ரப் அலி]

## இல்ல விளையாட்டு போட்டி

கிளிநொச்சி, ஜூன் 25

பரந்தன் இந்து தமிழ் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி மேற்படி வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட உதவி அரசாங்க அதிபர் எஸ். அமிர்தலிங்கமும். சிறப்பு விருந்தினர்களாக கல்வி அதிகாரிகள் கே. கே. சோமசுந்தரம், அ. தங்கராசா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

போட்டியில் சுப்பிரமணியம் இல்லம் முதலாம் இடத்தையும், நல்லதம்பி இல்லம் இரண்டாம் இடத்தையும், சிவசுந்தரம் இல்லம் மூன்றும் இடத்தையும் பெற்றுக் கொண்டன. (ந—244)

சுவீடன், ஜெர்மனி, இத்தாலி, சிங்கப்பூர், சுவிற்சர்லாந்து, ஒல்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் பங்குபற்றினார்கள்.

யப் பெற்ற இலங்கை வென்னப்புவையை சேர்ந்த அன்ரனி பெரேராவுக்கு 50 ஆயிரம் ரூபா பணப் பரிசு வழங்கப்பட்டது. (ந—54)

# ஒலிம்பிக் போட்டியில்

## நேபாளம் பங்குபற்றும்; பொலிவியா பங்குபற்றாது

காட்மண்டு, ஜூன் 25

லொஸ் ஏஞ்ஜல்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் நேபாளம் பங்குபற்றும்.

நேபாள வானொலி அதிகாரபூர்வ அறிவிப்பு ஒன்றின் மூலம் இதனைத் தெரிவித்தது.

மெய்வல்லுனர் போட்டிகள், குத்துச் சண்டை, பாரம் தூக்குதல் போன்ற விளையாட்டுக்களில் நேபாளம் பங்குபற்றுமென வானொலிச் செய்தி கூறியது. ஆனால் நேபாள அணியில் எத்தனை வீரர்கள் இடம்பெறுவார்கள் என்பது அறிவிக்கப்படவில்லை.

1964 ஆம் ஆண்டுக்குப் பிறகு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் 1968 இல் மெக்ஸிகோ நகரத்தில் நடைபெற்ற போட்டியைத் தவிர்ந்த ஏனைய போட்டிகளில் நேபாளம் பங்குபற்றியுள்ளது.

அமெரிக்காவும் மற்றும் மேற்கத்திய நாடுகளும் பகிஷ்கரித்த மாஸ்கோ ஒலிம்பிக் போட்டியிலும் (1980ஆம் ஆண்டு) நேபாளம் கலந்து கொண்டது.

அரசியல் விளையாட்டுடன் கலப்பதில்லை என நேபாளத்தின் கல்வி அமைச்சரான பாடெசிங் தாரு கூறினார். (ந)

★

லாபாஸ், ஜூன் 25


லொஸ் ஏஞ்ஜல்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ளப் போவதில்லை என பொலிவியா அறிவித்தது. அமெரிக்கப் பத்திரிகை ஒன்றில் வெளியிடப்பட்டுள்ள அவதூறான கட்டுரை ஒன்றின் காரணமாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

தேசிய கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளுமுகமாகவே இந்த முடிவை எடுக்க வேண்டியிருந்ததாக அதிகாரபூர்வ அறிக்கை ஒன்று கூறியது.

ஒலிம்பிக் போட்டிக்கு அணியொன்றை அனுப்பி வைக்க பொருளாதார ரீதியில் தனக்கு முடியாதிருப்பதாக முன்னர் பொலிவிய அரசாங்கம் கூறியிருந்தது. ஆனால் நாட்டுக்கு ஒருவித செலவும் ஏற்படாதென பொலிவிய ஒலிம்பிக் கமிட்டி கூறியதை அடுத்து பொலிவிய அரசு தனது கருத்தை மாற்றிக் கொண்டது.

அமெரிக்க பத்திரிகையின் பிரச்சினைக்குப் பின்னரும் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டுமென ஒலிம்பிக் கமிட்டி சிபார்சு செய்தது. ஆனால் அரசாங்கம் இந்த யோசனையை நிராகரித்தது.

சர்ச்சைக்குரிய இந்தக் கட்டுரை வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்தது. பொலிவியாவின் நிதிக் கஷ்டத்தைப் பற்றி நகைச்சுவையாக அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. (ந)



மேற்கு ஜேர்மனியைச் சேர்ந்த 26 வயது மெய்வல்லுன விளையாட்டு வீரர் கார்லோ த்ரான் ஹார்ட் உலகில் உள்ள சிறந்த உயரப் பாய்தல் வீரர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார்.

25க்கும் மேற்பட்ட போட்டி நிகழ்ச்சிகளில் இவர் 2.30 மீட்டர் உயரத்தைத் தாண்டியுள்ளது குறிப்பிடத்தக்கது. (ந*ச)

## சான்றிதழ்

மஸ்கெலியா, ஜூன் 25

நோர்வூட் தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் திறமைச் சான்றிதழ்களைப் பெற்றார்கள்.

கண்டி மறைக் கல்வி மன்றம் மஸ்கெலியா மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடத்திய கிறிஸ்தவ போட்டிப் பரீட்சையிலேயே இம் மாணவர்கள் மேற்படி சான்றிதழ்களைப் பெற்றனர். (ல—191)

இங்கு குடிசைக் கைத்தொழில் நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. (ல—236)

## சர்வ மத ஐக்கிய நிறுவன கூட்டம் இன்று

கொழும்பு, ஜூன் 26

சர்வ மத ஐக்கிய நிறுவனத்தின் ஆதரவில் இன்று திங்கட்கிழமை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறும் கூட்டத்தில் 9 மாகாணங்களில் இருந்து வரும் 72 மத குருமார்கள் பங்குபற்றுவர்.

மாகாணங்கள் தோறும் சர்வ மத ஐக்கிய நிறுவனத்தின் கிளைகளை அமைப்பது பற்றி ஆராய்வதற்காகவே இக் கூட்டம் நடத்தப்படுகிறது.

ஜூலை 22 ஆம் திகதி ஆரம்பிக்க உத்தேசித்திருக்கும் "ஒற்றுமை வாரம்" பற்றியும் இக் கூட்டத்தில் ஆராயப்படும்.

ஒவ்வொரு மாகாணத்திலும், ஒவ்வொரு மதத்திற்கும் இருவர் என்ற ரீதியில் எட்டுப் பேர் தெரிவு செய்யப்பட்டு இன்றைய கூட்டத்தில் பங்குபற்றுகின்றனர்.

காலையில் சகல பிரதிநிதிகளும் அடங்கிய கூட்டம் நடைபெறும்.

பிற்பகல் 1.30 மணிக்கு சர்வமத ஐக்கிய நிறுவனத்தின் கூட்டம் நடைபெறும். அதில் காலை நிகழ்ச்சியின் போது தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் ஆராயப்படும்.

பின்னர் பிற்பகல் 2.30 மணிக்கு பொதுக் கூட்டம் நடைபெறும் இதில் சர்வமத ஐக்கிய நிறுவனத்தின் திட்டங்கள் வெளியிடப்படும். (ஊ—க)

## பாடசாலை றகர்

ஆனந்தாக் கல்லூரி அணிக்கும் லும்பினி கல்லூரி அணிக்கும் இடையே பொலீஸ் பூங்காவில் நடைபெற்ற றகர் போட்டியில் 31—0 புள்ளிகளால் ஆனந்தா அணி வெற்றி பெற்றது.

இடைவேளையின் போது 15—0 புள்ளிகளால் ஆனந்தா அணி முன்னணியில் நின்றது.

ஜனக டி சில்வா, கெலும் திசாநாயக்க, ககன் மதுரசிங்க, கபில பெரேரா எம். ஆர். ரஸீக் ஆகியோர் ஆனந்தா அணிக்கான புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தனர்.

எஸ். எம். அபேகுணவர்த்தன இப்போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தார். (ந)

## இரு பிரிவிலும் வெற்றி

பேசாலை, ஜூன் 25

விளையாட்டு அமைச்சின் அடம்பன் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் ஆண், பெண் இரு பிரிவுகளிலும் அடம்பன் புழைய மாணவர் விளையாட்டுக் கழகம் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

அடம்பன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இவ் விளையாட்டுப் போட்டிகளை அடம்பன் உதவி அரசாங்க அதிபர் திரு. வி. முருகையா ஆரம்பித்து வைத்தார்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு மன்னார் கச்சேரி தலைமை நிலைய அதிபர் திரு. அருந்தவச் செல்வம் பரிசில்களை வழங்கினார். (ந—251)

## வெற்றி

கொழும்பு, ஜூன் 26

அட்டாளைச்சேனை எலோ லைட் விளையாட்டுக் கழகத்திற்கும் அக்கரைப்பற்று புலட்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் அட்டாளைச்சேனை எலோ லைட் விளையாட்டுக் கழகம் 3—0 கோல் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது.

மேற்படி போட்டியின் போது எலோ லைட் விளையாட்டுக் கழகத்தின் சார்பில் ஏ. எச். ஹம்சா ஸனுஸ், வை. பி. மசூத், எம். பைறூஸ் ஆகியோர் மிகவும் திறமையாக விளையாடினர். (ந)

# தினபதி

வார இதழ் "சிந்தாமணி!" ஞாயிறு தோறும் வெளிவரும்

## மண்டலாபிஷேக விழா

கொழும்பு, ஜூன் 26

கொழும்பு - மருதானை கப்பித்தாவத்தை ஸ்ரீ கைலாசநாத சுவாமி கோவில் முதலாவது வருட மண்டலாபிஷேக விழா நேற்று (25—6—84) காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகியது.

திங்கள் முதல் மண்டலாபிஷேக விழா தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும். கடைசித் தினமான 5 – 7 – 84 அன்று சங்காபிஷேகமும், இரவு திருக்கல்யாணமும் நடைபெறும்.

மேற்படி கிரியைகளை கோயில் பிரதம குரு சிவஸ்ரீ இராமநாதக் குருக்கள் நடத்தி வைப்பார். (ம)

மீன் பிடிக்க

## கச்சதீவுவரை செல்ல அனுமதிக்க வேண்டும்

கொழும்பு, ஜூன் 26

கச்சதீவுவரை சென்று மீன்பிடிப்பதற்கு அனுமதிக்குமாறு தேசிய பாதுகாப்பு அமைச்சரிடம் யாழ். மீனவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தேசிய பாதுகாப்பு அமைச்சரும், பதில் பாதுகாப்பு அமைச்சருமான திரு. லலித் அத்துலத்முதலி ஞாயிறன்று யாழ். நகருக்கு விஜயம் செய்தபோதே, மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

கடல் கண்காணிப்பு வலயம் பிரகடனப்படுத்திய பின்னர், அந்த எல்லைக்கு அப்பால் சென்று மீன்பிடிக்க முடியாத நிலை தோன்றியிருப்பது பற்றி, அமைச்சரிடம் எடுத்துக் கூறப்பட்டது.

இது தொடர்பாக பாதுகாப்பு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பதாக அமைச்சர் உறுதியளித்தார்.

யாழ். நகரில் உள்ள பாதுகாப்பு அதிகாரிகளையும் அமைச்சர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

வட பகுதியில் தற்போது நிலைமை சீரடைந்துள்ளதாகவும், அமைதியை நிலைநாட்ட அங்குள்ள பொதுமக்கள் பாதுகாப்புப் பிரிவினருக்குப் பெரிதும் ஆதரவு அளித்து வருவதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன (ப- ர)

# ஹெரோயின் கடத்தல்:

# பின்னணியில் பெரும்புள்ளிகள்

## தப்பிவந்தவர் தகவல்

கொழும்பு, ஜூன் 26

இலங்கையைச் சேர்ந்த 20 பெரும் புள்ளிகளையும் பாகிஸ்தானின் பெரும் வர்த்தகர்கள் பலரையும் உள்ளடக்கிய குழு ஒன்று இலங்கைக்குள் ஹெரோயின் கடத்தும் முயற்சியின் பின்னணியில் இயங்கி வருகிறது.

பாகிஸ்தானில் அந்தக் குழுவினரிடம் இருந்து தப்பி இங்கு வந்துள்ள இலங்கையர் ஒருவர் மேற்கண்ட தகவலை "தினபதி"க்கு தெரிவித்தார்.

போதைவஸ்து தடுப்பு பணியகத்துக்கு இந்தக் குழுவினரைப் பற்றிய தகவல்களை வெளியிட விரும்புவதாக அந்த நபர் மேலும் கூறினர்.

அதே வேளை கராச்சியில் இயங்கும் மாபியா பாணியிலான இந்தக் குழுவினருக்கும், கொழும்பில் உள்ள பிறிதொரு போட்டிக் குழுவுக்கும் இடையே மோதல் ஒன்று ஆரம்பித்துள்ளது.

மேற்கு ஐரோப்பிய நகரங்களுக்கு ஹெரோயினை அனுப்புவது தொடர்பாகவே இந்த சர்ச்சை ஆரம்பித்திருக்கிறது.

பல சந்தர்ப்பங்களில் போதைவஸ்து கடத்துவோருக்கு இந்தக் குழுவினர் முதற் கட்டத்தில் இலவசமாகவே ஹெரோயினை வழங்குகின்றனர்.

இவர்கள் அதனை விற்று குழுவினருக்குப் பணத்தைக் கொடுக்க முடியும்.

எனினும் வேறு பலருக்கு இந்த முறையில் பரிமாற்றம் நடைபெறுவதில்லை. மாறாக அவர்களைப் போதைப் பொருள் பாவனைக்கு உட்படுத்துகின்றனர்.

ஒரு முறை அதன் பாவனைக்கு உட்பட்டவருக்கு, பின்னர் குழுவினரின் கட்டளைகளுக்கு அடிபணிவதைத் தவிர வேறு வழிகள் கிடையாது.

இவ்வாறு மேற்படி இலங்கையர் தகவல் தெரிவித்தார்.

இவர் 3 மாதங்கள் போதைப் பொருள் பாவிப்பவராக இருந்தாராம்.

அக்கால கட்டத்தில் அவரது உடமை, பணம், உடைகள், ஆவணங்கள் அனைத்தும் களவாடப்பட்டிருக்கின்றன.

பின்னர் கொழும்புக்கு போதைப் பொருட்களை கொண்டு செல்லுமாறு இவர் கேட்கப்பட்டாராம். இவர் அதற்கு மறுப்புத் தெரிவித்துவிட்டு நண்பர் ஒருவரின் உதவியுடன் தப்பி கொழும்பு வந்திருக்கிறார். (ப—8)



ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அமெரிக்காவில் நியூயோர்க் நகருக்கு விஜயம் செய்த போது அவரைக் கௌரவிக்கும் விதத்தில் அவரிடம் நகரத் திறப்பை மேயர் எட் கொக் கையளித்தார். மேயருக்கு வெள்ளித்தட்டு ஒன்றை ஜனாதிபதி அன்பளிப்புச் செய்தார். அப்போது எடுத்த படத்தை மேலே காணலாம். (ப)

## இறக்குமதிக் கருவாடு

### கூட்டுறவு சங்கங்கள் மூலம் விற்பனை

கொழும்பு, ஜூன் 26

துபாயிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் நல்லரக நெத்தலி மற்றும் பொம்பீளிக் கருவாடு வகைகள் இறக்குமதியாகியுள்ளன.

இவை கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும்.

கருவாடு வகைகள் போதிய அளவு இருப்பதால் தேவையானவற்றை வெலிசறை களஞ்சிய சாலைகளில் இருந்து பெற்றுக் கொள்ளும்படி கூட்டுறவுச் சங்கங்களை வர்த்தக, கப்பற்றுறை அமைச்சு கேட்டுள்ளது.

(ப- 11)

## காவ்நடைகளை பாதித்து வரும் நோய்களை தடுக்க துரித ஏற்பாடு

கொழும்பு, ஜூன் 26

கால்நடைகளைப் பாதிக்கும் இரு விதமான பயங்கர நோய்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் நாடெங்கிலும் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் இது சம்பந்தமாக உத்தரவிட்டிருக்கிறார். கால்நடைகள் பாதுகாப்பு சுகாதாரத் திணைக்களம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

எச். எஸ். எனப்படும் கண்டமாலை என்ற நோயும், உணவு வாய் சம்பந்தப்பட்ட மற்றொரு நோயும் தீவிரமாகப் பரவும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

இந்த நோய்கள் கால்நடைகளின் இறப்பிற்குக் காரணமாக அமைந்துள்ளன. இது பாற்பண்ணை அபிவிருத்தியில் தாக்கத்தையும் ஏற்படுத்தும் எனக் கருதப்படுகிறது.

நோய்த் தடுப்பு ஊசிகளைச் செலுத்தி கால்நடைகள் மத்தியில் நோய் பரவாமல் தடுக்கும் முயற்சியில் நாற்பது மிருக வைத்தியர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள்.

இவர்கள் சுமார் இரண்டு மாத காலங்களுக்கு நாடெங்கிலும் பயணம் செய்து தீவிரமாக நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

நாடெங்கிலும் உள்ள கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளுக்கும், எருமைகளுக்கும் கட்டாயமாக தடுப்பூசிகளைப் போட்டுக் கொள்ள வேண்டும்.

தமது பகுதிக்கு விஜயம் செய்யும் கால்நடை வைத்தியர்களுக்கு தங்கு[illegible] பூரண ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும். இதனால் கால்நடைகளை எதிர் நோக்கும் பயங்கர ஆபத்திலிருந்து தடுக்க முடியுமென திரு. தொண்டமான் சகல கால்நடை வளர்ப்போர்களையும் கேட்டு

## வடக்கு கிழக்கு பகுதிகளில் 30 நாட்களுள் 10 கொலைகள்

### வின்சன்ட்பெரேரா அறிக்கையில் தகவல்

கொழும்பு, ஜூன் 26

கடந்த 30 நாட்களுக்குள்

ளையும் மற்றுமொரு இடத்தில் தட்டெழுத்து இயந்திரங்களும்,

தில் ஒரு கொலை முயற்சியும், பொதுமக்கள் மத்தியில் ஆறு

## கொழும்பு கண் ஆஸ்பத்திரியில் இரவு 10 மணிவரை சிகிச்சை

## விநாயகர் ஆலய மகோற்சவம்

## கொழும்பு கண் ஆஸ்பத்திரியில் இரவு 10 மணிவரை சிகிச்சை

கொழும்பு, ஜூன் 26

நாட்டில் தற்போது துரிதமாக பரவி வரும் கண் நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் வசதி கருதி, கொழும்பு கண் ஆஸ்பத்திரியில் இரவு பத்து மணிவரை சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

கண் நோயினால் பாதிக்கப்பட்ட பெருந் திரளான மக்கள் கண் ஆஸ்பத்திரிக்கு தினமும் வந்து, நீண்ட வரிசையில் சிகிச்சைக்காக காத்து நிற்பதைக் காணமுடிகிறது.

இவர்களின் நலன் கருதி இரவு பத்து மணிவரை சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மகளிர் விவகார போதனா வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் டாக்டர் தயா சமரசிங்க தெரிவித்தார்.

கொழும்பு, யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் ஏனைய பகுதிகளிலும் கண்நோய் பரவுவதாகவும் அவர் தெரிவித்தார். (ப-ர)

## மகோற்சவம்

கொழும்பு, ஜூன் 26

கோண்டாவில் ஆசிமட விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம், இன்று 26 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகிறது.

துவஜாரோகணத்துடன் ஆரம்பமாகும் இம் மகோற்சவம், தொடர்ந்து பத்து தினங்களுக்கு நடைபெறும்.

அதையடுத்து எதிர்வரும் ஜூலை 4 ஆந் திகதி காலை பத்து மணிக்கு சித்திரத் தேரில் விநாயகப் பெருமான் வீதி வலம் வருவார்.

இறுதி நாளான ஜூலை 5ஆந் திகதி, ஆனி உத்தர தினத்தன்று மாலை ஐந்து மணிக்கு, தீர்த்தத் திருவிழா நடைபெறும். (ல-ர)

கொழும்பு, ஜூன் 26

கடந்த 30 நாட்களுக்குள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 10 கொலைகளும், 3 கொலை முயற்சிகளும், 34 கொள்ளைகளும், 12 தீவிரவாதச் செயல்களும் நடைபெற்றிருக்கின்றன.

மேற்படி விவரங்களை நாடாளுமன்ற விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. கே. வின்சன்ட் பெரேரா சமர்ப்பித்துள்ள அறிக்கை ஒன்றில் வெளியிட்டிருக்கிறார்.

மே மாதம் 16 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 16 ஆம் திகதிவரை இச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 21 இடங்களில் ரொக்கப் பணம், தங்கநகைகள், வாகனங்களும், 1 இடத்தில் ஆயுதமுனையில் கொள்ளையும் மற்றுமொரு இடத்தில் தட்டெழுத்து இயந்திரங்களும், இதர தளவாடங்களும், இன்னுமொரு இடத்தில் இரசாயனப் பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

மேலும் இரண்டு அரசாங்க நிறுவனங்களையும், ஒரு வங்கியையும் தீவிரவாதிகள் கொள்ளையிட்டுள்ளனர்.

இரண்டு பயங்கரவாதச் செயல்கள் இடம்பெற்றிருக்கின்றன. பொதுமக்களில் நால்வரும், ஒரு அரசாங்க ஊழியரும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பத்து பயங்கரவாதச் சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. மட்டக்களப்பு சிறைச்சாலை உடைப்பும் அவற்றில் ஒன்று.

பொதுமக்களில் ஒருவர் கொல்லப்பட்டிருக்கிறார். ஒரு அரசாங்க உத்தியோகத்தரைக் கொலை செய்ய முயற்சிகள் நடைபெற்றிருக்கின்றன.

தனியார் மத்தியில் ஏழு கொள்ளைகள் நடத்தப்பட்டிருக்கின்றன. ஒரு அரசாங்க நிறுவனத்திலும் மற்றுமொரு தனியார் கம்பெனியிலும் கொள்ளைகள் இடம்பெற்றுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் மூன்று பொலீஸ் உத்தியோகத்தர்கள் கொலை செய்யப்பட்டிருக்கின்றனர். பொதுமக்களில் ஒருவர் கொலையுண்டுள்ளார்.

இரண்டு அரசாங்க நிறுவனங்களிலும் பொதுமக்கள் மத்தியிலும் இரண்டு கொள்ளைகளும் நடத்தப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் ஒரு கொலை முயற்சியும், பொதுமக்கள் மத்தியில் ஆறு கொள்ளைகளும் இடம்பெற்றிருக்கின்றன.

இவ்வாறு திரு. வின்சன்ட் பெரேராவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (எ-ய)

நோக்கும் பயங்கர ஆபத்திலிருந்து தப்பிக்க முடியுமென திரு. தொண்டமான் சகல கால்நடை வளர்ப்போர்களையும் கேட்டிருக்கிறார்.

நோய் தடுப்பு வேலைகள் ஜூலை, ஆகஸ்ட் ஆகிய இரு மாதங்களிலும் பரவலாக நடைபெறும். (எ-ய)

# இலங்கைவிஜயம்: பிரிட்டிஷ் எம். பிக்கள் ஒத்திவைத்தனர்

லண்டன், ஜூன் 25

இரண்டு பிரிட்டிஷ் எம். பிக்கள் இலங்கை வருவதற்கு இலங்கை அரசாங்கம் விசா வழங்க மறுத்ததைத் தொடர்ந்து அவர்கள் தங்கள் இலங்கை விஜயத்தை ஒத்தி போடுவதாக ஞாயிறன்று அறிவித்தார்கள்.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் பற்றி ஆராயவென பிரிட்டிஷ் நாடாளுமன்ற மனித உரிமைகள் குழுவைச் சேர்ந்த தொழிற்கட்சி உறுப்பினர் டேவ் நெல்லிஸ்ட்டும் கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த ஹரி கிறீன்வேயும் இலங்கை வரவிருந்தனர்.

நெல்லிஸ்ட் லண்டனிலிருந்து புறப்படவிருந்தார். கிறீன்வே புதன்கிழமை புறப்பட உத்தேசித்திருந்தார்.

இதற்கிடையில் கடந்த வியாழக்கிழமை இலங்கை நாடாளுமன்றத்தில் பிரதி வெளிவிவகார அமைச்சர் பேசுகையில், மேற்படி இருவரும் இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட எண்ணுவதால் அவர்களுக்கு விசா வழங்க மறுத்திருப்பதாக அறிவித்தார்.

அதைத் தொடர்ந்து அவர்கள் தங்கள் இலங்கைப் பயணத்தைப் பின்போடுவதாக அறிவித்திருக்கின்றனர். (ப)

## சிறையில் நோன்பு கொண்டாட்டம்

கொழும்பு, ஜூன் 26

முஸ்லிம் சிறைக் கைதிகள் நோன்புப் பெருநாளை கொண்டாடுவதற்கு அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் மதவிவகாரக் குழு ஒழுங்கு செய்து வருகிறது.

நோன்புப் பெருநாள் தினத்தில் மஹரைச் சிறைச்சாலைக்கு விஜயம் செய்யும் முஸ்லிம் லீக் மதவிவகாரக் குழு உறுப்பினர்கள் முஸ்லிம் சிறைக் கைதிகளோடு பெருநாள் தொழுகையிலும் ஈடுபடுவர்.

சிறைச்சாலையின் உள்ளே மதவழிபாடும் பெருநாள் கொண்டாட்டமும் அன்று நடத்தப்படும். (ப—7)

## கொழும்பில் லிபிய காரிமார்

கொழும்பு, ஜூன் 26

ரமழானை முன்னிட்டு தற்போது இலங்கைக்கு விஜயம் செய்துள்ள லிபிய நாட்டு "காரி" மார்கள், இவ்வாரம் கொழும்பிலுள்ள பள்ளி வாசல்களுக்கு விஜயம் செய்வர். (ப-7)

### விக்டோரியா திட்ட திறப்பு விழா:

# மார்கிரட் தாட்சர் கலந்து கொள்வது ஊர்ஜிதம்

கொழும்பு, ஜூன் 26

எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடைபெற இருக்கும் விக்டோரியா நீர்த்தேக்கத்தின் திறப்பு விழா வைபவங்களில் பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரட் தாட்சர் கலந்து கொள்வது ஊர்ஜிதப் படுத்தப்பட்டு இருக்கிறது.

திருமதி மார்கிரட் தாட்சர் மேற்படி வைபவத்தில் நிச்சயம் கலந்து கொள்வார் என்று வெளிவிவகார அமைச்சு, மகாவலி அபிவிருத்தி அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரட் தாட்சர், இலங்கைக்கு விஜயம் செய்யும் அதே வேளை, மலேசியாவுக்கும் உத்தியோகபூர்வ சுற்றுலா ஒன்றை மேற்கொள்ள இருக்கிறார்.

திருமதி மார்கிரட் தாட்சரின் இலங்கை விஜயம் குறித்து வெளிவிவகார அமைச்சர் ஜனாப் ஏ. சீ. எஸ். ஹமீத் மூலம் மகாவலி அபிவிருத்தி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது எனவும் தெரிய வருகிறது.

இலங்கைக்கு அவர் விஜயம் செய்யும் திகதி, இங்கு தங்கி நிற்கும் தினங்கள் தொடர்பாக இதுவரை இறுதி முடிவெடுக்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தனது அமெரிக்க விஜயத்தை முடித்துக் கொண்டு பிரிட்டன் சென்றிருக்கிறார்.

இச் சுற்றுலாவின் போது ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தன, பிரிட்டன் பிரதமரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிறார்.

ஜனாதிபதியின் பிரிட்டன் விஜயத்தின் பின்னரே, மார்கிரட் தாட்சரின் இலங்கை விஜயம் குறித்து திகதி நிர்ணயிக்கப்படும் எனவும் தெரிய வருகிறது.

விக்டோரியா நீர்த்தேக்கத்தின் நிர்மாண வேலைகளுக்கு 10 கோடி பவுணை பிரிட்டன் அரசாங்கம் அன்பளிப்புச் செய்ததை கௌரவிக்கும் முகமாகவே, பிரிட்டிஷ் பிரதமருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறதென மகாவலி அமைச்சு அறிவிக்கின்றது.

பிரிட்டனின் இரண்டாவது எலிசபெத் மகாராணியும், பிலிப் இளவரசரும் இந்த நீர்த்தேக்கத்தை ஏற்கனவே பார்வையிட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஏ-11)

## கடற்றொழில் மாநாடு

கொழும்பு, ஜூன் 26

உலக கடற்றொழில் மாநாடு ஒன்று நாளை 27 ஆம் திகதி முதல் ஜூலை ஆறும் திகதி வரை ரோமாபுரியில் நடைபெறும்.

ரோமாபுரியில் உள்ள சர்வதேச உணவு. விவசாய அபிவிருத்தி ஸ்தாபனத்தின் தலைமையகத்தில் இம்மாநாடு நடைபெறும்.

முதற் தடவையாக நடைபெறும் இந்த மாநாட்டில் 150 நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள்.

இந்த உலக கடற்றொழில் மாநாட்டில் கலந்துக் கொள்வதற்காக, கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா ரோமாபுரிக்குப் பயணமானார். அமைச்சருடன், கடற்றொழில் அமைச்சின் மேலதிக செயலாளர் திரு. எலொய். டபிள்யூ பெர்ணண்டோ, கடற்றொழில் பணிப்பாளர் திரு. அன்டன் அபெத்து, தேசிய நீர்வாழ் மூலவள அதிகார சபையின் தலைவர் திரு. மிரான் ஜெயவர்த்தன. ஆலோசகர் திரு. டபிள்யூ பெரேரா ஆகியோரும் பயணமானார்கள். (ண-10)

# ஏழை மக்களை ஏமாற்றுபவர்கள் மீது கருணைக்கு இடமில்லை

### கம்பஹா மாவட்ட நீதிபதி எச்சரிக்கை

கம்பஹா, ஜூன் 25

தொழில் வாய்ப்புப் பெற்றுத் தருவதாக ஆசை வார்த்தைகள் கூறி ஏழை மக்களை ஏமாற்றுபவர்கள் மீது நீதிமன்றம் கருணை காட்ட மாட்டாது. அவர்களுக்குப் பிணையும் வழங்க மாட்டாது.

இவ்வாறு கம்பஹா மாவட்ட நீதிமன்றத்தில் மாவட்ட பதில் நீதிபதி திரு. கே.பி.எஸ். அபேயக்கோன் கூறினார்.

மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி 41 பேரிடம் இருந்து பணத்தைப் பெற்று ஏமாற்றியதாகக் கூறப்படும் ஒரு வழக்கில் நீதிபதி இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

கம்பஹாவைச் சேர்ந்த ஜனுபா மஜீத், சரோஜினி மாணிக்கம் ஆகிய இரு பெண்களைப் பார்த்து பதில் நீதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

மத்திய கிழக்கு நாடுகளில் ஆஸ்பத்திரிகளில் தொழில் வாய்ப்புப் பெற்றுத் தருவதாக 41 பேரிடமிருந்து பணம் வசூல் செய்து —

அவர்களுக்கு கம்பஹா திங்காப்பிட்டிய என்ற இடத்தில் கொழும்பில் இருந்து வரவழைக்கப்பட்ட ஒரு டாக்டர் மூலம் பயிற்சி வகுப்புகள் நடத்தி விட்டு அவர்களுக்குத் தொழில் வாய்ப்புப் பெற்றுக் கொடுக்காமல் மோசடி செய்தார்கள் என பிரஸ்தாப பெண்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

கம்பஹா பொலீஸ் மோசடிப் பிரிவுக்குக் கிடைத்த புகாரை அடுத்து மேற்படி இரு பெண்களும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு தலா 10 ஆயிரம், 5 ஆயிரம் ரூபா பிணையில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

இவ் வழக்கு கம்பஹா மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, பதில் மாவட்ட நீதிபதி திரு. கே.பி.எஸ். அபேயக்கோன் சந்தேக நபர்களான இரு பெண்களையும் பார்த்தே மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்தார்.

உங்களைப் போன்றவர்களுக்கு இவ்வித குற்றச் செயல்களுக்குக் கருணை காட்டலாகாது. ஆகவே நீங்கள் வாங்கிய பணத்திற்கு வகை சொல்ல வேண்டுமென நீதிபதி மேலும் தெரிவித்தார். (எ-82)

## கிராம எழுச்சி கொண்டாட்டம்

கொழும்பு, ஜூன் 26

மூன்று அமைச்சர்கள் நேற்று திங்கட்கிழமை அநுராதபுர கிராம எழுச்சிக் கொண்டாட்டங்களில் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டார்கள். மாலை 4 மணிக்கு பொருட்காட்சி ஆரம்பமாகியது.

போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம்- எச்- முகம்மது, மகளிர் விவகார, குடும்பநல போதனா ஆஸ்பத்திரிகள் அமைச்சர் திருமதி சுனீத்ரா ரணசிங்கா, வர்த்தக கப்பற்றுறை அமைச்சர் திரு- எம்- எஸ்- அமரசிறி ஆகியோரே இம் மூன்று அமைச்சர்களுமாவர். (ண-7)

தினபதியிலும், சிந்தாமணியிலும் (மூலம் குறிப்பிடாது) பிரசுரிக்கப்படும் வெளிநாட்டுச் செய்திகள் அனைத்தும் பி. பி. சி., அ. இ. வா., டி. பி. ஏ. என். எஸ்.-வெ தூ.நி. ஆகியவற்றிலிருந்து கிடைப்பனவாகும்.

இப்பத்திரிகையை, அச்சிட்டுவெளியிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேனமாவத்தை, கொழும்பு — 12, (இலங்கை) தபால்பெட்டி 1613. வெளியிட்ட திகதி 26 ஜூன் 1984

Dinapathi, 5, Gunasena Mawatha, Colombo 1 2 P. O. Box 1613.